# திருமலைத்தீபம்
## Thirumalaitheepam

தீபம் – 86 சித்திரை – 2024 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=


## ஆயரின் செய்தி



**கிறிஸ்துவில் அன்புள்ளங்களே!**

யூபிலி ஆண்டை (2025) நோக்கிய எமது பயணத்தில் இவ்வாண்டு இறைவேண்டலுக்கு (செபம்) முன்னுரிமை கொடுத்து திருஅவை இவ்வாண்டை இறைவேண்டல் ஆண்டாக அறிவித்துள்ளது. ஜனவரி மாதம் 14 ஆம் திகதி எமது மறைமாவட்டத்தில் அனைத்து ஆலயங்களிலும் இதற்கான பிரகடனத்தைச் செய்தோம். எமது மேய்ப்புப்பணி மடலில் இறைவேண்டலில் முன்னேற பல முன்மொழிவுகளையும் தந்தோம். இவற்றில் நாம் அதிக அக்கறை செலுத்தி எமது செப வாழ்வை வளப்படுத்துவோம். விசேடமாக பொதுநிலை

**கலாநிதி. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**மறைமாவட்ட ஆயர்**

➡ 2

## உவர்மலை குழந்தை இயேசு ஆலய 38வது வருடாந்த திருவிழா





திருகோணமலை மறைமாவட்டத்தின் உவர்மலை குழந்தை இயேசு ஆலயத்தின் 38வது வருட திருவிழாவானது 26.01.2024 கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இவ்வருடம் எமது பங்கின் கொடிமரம் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டதுடன் தாய்க்

தொடர்ச்சி – 08

## 100வது அகவையில் மடு அன்னை



1924 ஆம் ஆண்டு கொழும்பு ஆயரும் இந்தியாவிலிருந்து வருகை தந்த ஆயரும் இணைந்து மடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட தினத்தை நினைவு படுத்தும் முகமாக ஒவ்வொரு 25வது ஆண்டு யூபிலி தினத்தில் அன்னையின் திருச்சுரூபம் மன்னார் மறைமாவட்ட பங்குத் தளங்களுக்குப் பவனியாக கொண்டு செல்லப்படுவது வழமையானதொன்றாகும்.

அதேபோன்று இவ்வருடமும் மடு அன்னைக்கு முடி சூட்டப்பட்டு 100வது ஆண்டு யூபிலி தினத்தை

தொடர்ச்சி – 02

## புனிதர்களோடு செபிப்போம்



கடந்த 25.01.2024 அன்று புனித மரியாள் பேராலயப்பீடப்பணியாளர்கள் "புனிதர்களோடு செபிப்போம்" எனும் கருப்பொருளை கருத்திற் கொண்டு பீடப்பணியாளர்களுக்கு பொறுப்பான அருட்சகோதரர் P. லோரன்ஸ் அவர்களால்

தொடர்ச்சி – 02

## புனிதர்களின் புனிதப்பண்டங்கள்



திருகோணமலை புனித குவாடலூப்பே அன்னை திருத்தலத்தின் பல வருடங்களாக மூடப்பட்டு இருந்த ஆலயப் பணிமனையின் பாதுகாப்புப் பெட்டகம் பங்குத்தந்தை அருட்பணி. S. ஜெயரட்ணம் அடிகளாரின் தலைமையில் 03.01.2024 அன்று பங்கு மக்கள் சிலரின் உதவியோடு திறக்கப்பட்டது. உள்ளே யாரும் எதிர்பாராத விதமாக மரியன்னையோடு தொடர்புடைய 01 திருப்பண்டம் உட்பட 09 புனிதர்களின் புனிதப்பண்டங்கள் அடங்கிய 09 பேழைகளும், செல்வநாயகபுரம் புனித வனத்து அந்தோனியார் ஆலயத்திற்குச் சொந்தமான ஒரு தங்கச்சங்கிலியும் மாதாவின் ஆசியினால் கிடைக்கப் பெற்றிருக்கிறது.



**குவாடலூப்பே பங்கு மக்கள்**

## புனித வனத்து அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா

திருகோணமலை மறைமாவட்டம் செல்வநாயகபுரம் புனித வனத்து அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா 19.01.2024 அன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. "கடவுளை நோக்கி தம் எண்ணங்களையும், உள்ளத்தையும் எழுப்புவதே இறைவேண்டல் ஆகும்." எனும் கருப்பொருளை மையப்படுத்தி நவநாள் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது. 28.01.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை அதி வணக்கத்திற்குரிய ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவிழா இனிதே நிறைவடைந்தது.



செல்வநாயகபுர பங்கு மக்கள்

## இந்தியா (நாகப்பட்டினம்) அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்கு யாத்திரை



எதிர்வரும் சித்திரை மாதம் புனித யாத்திரையை மேற்கொள்ள உள்ளோம். 20 பேர் மட்டுமே இவ்யாத்திரையில் கலந்துகொள்ள முடியும். எனவே புனித யாத்திரையில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரைத் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய 0776771119

# பகிர்ந்துகொள்ளப்படும் போதுதான் மகிழ்ச்சி வளர்ச்சியடைகிறது.

உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சி என்பது வெகு தொலைவில் இல்லை. இது நம்முடன் மிகவும் நெருக்கமாக இருக்கின்றது. அந்த மகிழ்ச்சி நமக்கானது (திருத்தந்தை பிரான்சிஸ்)



இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது ஓர் அற்புதமான செய்தி அல்லது ஒரு கதையின் மகிழ்ச்சியான முடிவு அல்ல, மாறாக, அது நம் வாழ்க்கையை முழுமையாக எப்போதும் மாற்றக்கூடிய ஒன்று என திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

ஏப்ரல் 1 ஆம் திகதி இயேசுவின் உயிர்ப்பு விழாவிற்கு அடுத்த நாளான திங்கட்கிழமை, நண்பகல் 12 மணிக்கு, வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய அல்லேலூயா வாழ்த்தொலி செய்தியில் இவ்வாறு கூறினார்.

இன்றைய நாளின் நற்செய்திப் பகுதியை (காண்க மத் 28:8-15) மையமாகக் கொண்டு தனது அல்லேலூயா வாழ்த்தொலி செய்தியை பகிர்ந்துகொண்ட திருத்தந்தை, கல்லறைக்குச் சென்ற பெண்கள் இயேசு உயிர்த்து விட்டார் என்ற வானதூதரின் செய்தியைக்கேட்டு, அச்சமுற்றாலும் அதேவேளையில் பெருமகிழ்ச்சி உற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள் என்றும், இதுவே நற்செய்தி அறிவிப்பு என்றும் விளக்கினார்.

வழியில் உயிர்த்தெழுந்த இயேசுவை உயிருடன் சந்தித்ததில் பிறந்த இந்த மகிழ்ச்சி உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டது என்றும், இம்மகிழ்ச்சியே, அப்பெண்கள் தாங்கள் நேரில் கண்டதை ஓடிச்சென்று எல்லோருக்கும் அறிவிக்கத் தூண்டியது என்றும் சுட்டிக் காட்டினார் திருத்தந்தை.

இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது, மரணத்தின் மீது வாழ்க்கையின் வெற்றி, விரக்தியின் மீது நம்பிக்கையின் வெற்றி என்று கூறிய திருத்தந்தை, இயேசு கல்லறையின் இருளை அழித்து, என்றென்றும் வாழ்கிறார் என்றும், அவருடைய இருத்தல் எதையும் ஒளியால் நிரப்பக் கூடியது என்றும் தெரிவித்தார்.

உயிர்த்த ஆண்டவருடன் இருக்கும் ஒவ்வொரு நாளும் ஒரு முடிவற்ற பயணத்தின் கட்டமாகிறது என்றும், ஒவ்வொரு “இன்றைய நாளும்”, ஒவ்வொரு நாளைய நாளுக்கான நம்பிக்கையாக அமைகிறது என்றும் உரைத்த திருத்தந்தை, ஒவ்வொரு முடிவும் ஒரு புதிய தொடக்கத்திற்காக, ஒவ்வொரு கணமும் காலத்தின் எல்லைக்கு அப்பால், நிலைவாழ்வை நோக்கிக் கணிக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சி என்பது வெகுதொலைவில் இல்லை. இது நம்முடன் மிகவும் நெருக்கமாக இருக்கிறது, அந்த மகிழ்ச்சி நமக்கானது, ஏனென்றால் இது நமது திருமுழுக்கின் நாளில் நமக்கு வழங்கப் பட்டது என்றும் எடுத்துக்காட்டினார். பாவம், பயம் மற்றும் மரணத்தை வென்ற இயேசு, நம்மைப் பார்த்து பயப்பட வேண்டாம் என்று சொன்னால், நாம் பயம் கொள்ளாதிருப்போம், நம்பிக்கையற்ற வாழ்வில் விழாதிருப்போம், உயிர்ப்பின் மகிழ்ச்சியை விட்டு விடாதிருப்போம் என்று கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

### ஆயரின் செய்தி தொடர்ச்சி …

நம்பிக்கையாளர்கள் இறை வேண்டலில் முன்னேறக் குடும்பமாக நேரம் ஒதுக்கி அமைதியான சூழலை உருவாக்கி செபமாலை செபிப்பதிலோ அல்லது தனித்துச் செபிப்பதிலோ ஈடுபட வேண்டும். பங்குத் தந்தையரும் இதில் அதிக கவனம் செலுத்தி குடும்பங்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

இறைவேண்டல் என்றால் என்ன என்பதுபற்றி ஒருவசனத்தில் நாம் விளக்க முடியாது. இது ஓர் அனுபவம், இறையனுபவம். இவ் அனுபவம் ஒருவருக்கொருவர் வேறுபடும். இறைவனோடு நெருங்கிவரும் சிறப்பான சூழல் இது. அதேபோல எமது செபத்திற்கான பதிலை மனித சிந்தனையால் புரிந்துகொள்ள முடியாது. இறைவன் சில வேளைகளில் நம்மை ஆச்சரியப்படுத்துகின்றார். நாம் ஒரு விடயத்தை இறைவனிடம் கேட்கும்போது அது கிடைக்கவில்லையே எனும் சோகத்தோடு நாம் இருக்க, அதைவிட பல மடங்காக நாம் எதிர்பாராத வேளையில் தந்து விடுகின்றார். இயேசு உயிர்த்து விட்டார். வெறுமையான கல்லறை. மரியா கல்லறைக்குள் வானதூதரைக் கண்டார். அந்த சூழலில் இயேசு தோன்றினார். மரியா அவரைத் தோட்டக்காரர் என எண்ணி உரையாடினார். இயேசு தன்னை வெளிப் படுத்தியபோது மரியாவுக்கு எண்ணற்ற மகிழ்ச்சி. கல்லறையில் இறந்த இயேசுவைத் தேடி வந்தவருக்கு உயிர்த்த ஆண்டவர் பரிசாக… இதுவே பல சந்தர்ப்பங்களில் எமது அனுபவமாகவும் மாறுகின்றது. செபிக்க இருந்தால் இயேசுவை சந்திக்க முடியாது. திருப்பலியில் இயேசு அனுபவம் இல்லை. ஆயினும் இயேசுவை நாம் வேலைத்தளங்களிலும், வீதியோரங்களிலும், அசாதாரண சூழ்நிலைகளிலும் சந்தித்து விடுகின்றோம். இறைவேண்டலில் நாம் எப்போதும் உறுதியாக இருப்போம். அதுவே பல இறையனுபவங்களுக்கு எம்மை இட்டுச்செல்லும்.

தவக்காலம் எம்மை இறைவனிடம் நெருங்கி வரச்செய்யும் காலமாகும். இக்காலத்தில் நாம் பல ஆன்மீக செயல்களிலும் வழிபாடுகளிலும் ஈடுபடுகின்றோம். எமது பாவ வாழ்வு, நாட்டங்கள், சிந்தனைகள் பற்றி சிந்திக்கத் தூண்டி செயல்பட வைக்கும் காலமிது. எமது பாவங்கள் பற்றி சிந்திக்கும் அதேவேளை மூன்று வகையான மனிதர்பற்றி சிந்திக்க அழைக்கிறேன்.

1. இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் அவருக்கு எதிராகப் போராடி தண்டனை பெற்ற தீய சம்மனசுகள். இவற்றை அலகை, சாத்தான் என அழைக்கிறோம்.
2. ஆதாம் - ஏவாள் இவர்கள் அலகையின் சூழ்ச்சியால் இறைவனைப் போல ஆகலாம் என ஆசை கொண்டு பாவம் செய்தவர்கள்.
3. சாவான பாவம் செய்து நரகத்தில் தண்டனை பெறுபவர்கள்.

இவர்கள் செய்த பாவத்தின் விளைவு பெரிது. தீய சம்மனசுகள் மக்களை இறைவனிடமிருந்து பிரிக்க வேண்டுமென செயல்படுகின்றன. பாவத்தில் வீழ்ந்த ஆதாம் - ஏவாள் காரணமாக ஜென்ம பாவம் உருவானது. தொடர்ந்து சாவான பாவமும் பரவியது. இம்மூன்று வகையினரால் திரும்பிப் பழைய நிலைக்கு வரமுடியாது. காலம் கடந்துவிட்டது. ஆனால் இன்று நாம் பாவம் செய்யும்போது திருந்தி, திரும்பி வர இறைவன் பல சந்தர்ப்பங்களை உருவாக்கித் தருகின்றார். எமது தவறுகளை உணர்ந்து திருந்த பல சந்தர்ப்பங்களை இறைவன் தருகிறார். தேவைப்படும்போது மனசாட்சி உறுத்தல்கள், உணர்ந்துகொள்ள சிறு தண்டனைகள் தந்து வழிநடத்துகின்றார். எமது பாவங்களை உணர்ந்து திருந்தும்போது ஒப்புரவு அருட்சாதனம் மூலம் எம்மை புதுவாழ்விற்குள் அழைத்து வருகின்றார். இதுவே இறையருள். இதுவே அருளின் காலம். பயன்படுத்துவதும் தவறவிடுவதும் எம்மைப் பொறுத்ததே. கிடைக்கும் சந்தர்ப்பங்களை சிறப்பாகப் பயன்படுத்துவோம்.

இக்காலம் அருளும் ஆசீரும் நிறைந்த காலமாக அனைவருக்கும் அமைய செபிப்போம்.
ஒத்துழைப்போம், செயல்படுவோம்.

### மடு அன்னையின் 100ஆவது அகவை தொடர்ச்சி…

முன்னிட்டு மடு அன்னையின் திருச்சுரூபம் மடுவிலிருந்து மன்னார் வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய பங்குத் தளங்களுக்கு 07.12.2023 முதல் பவனியாக கொண்டு செல்லப்படுகின்றது. “மரியன்னையோடு நம்பிக்கையின் திருப்பயணிகளாகும்” என்ற கருப்பொருளுக்கேற்ப மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படவும் நாட்டில் அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டும் என்றும் சமாதானத்துக்கான ஒரு திருப்பயணமாக இது அமைவதாக மன்னார் திருஅவையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### புனிதர்களோடு செபிப்போம் தொடர்ச்சி…

நிலாவெளி பங்கின் துணை ஆலயமான கும்புறுபிட்டி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திற்குச் சென்றனர்.

நிலாவெளி பங்கின் பங்குத்தந்தை அருட்பணி வ. அலன் (IVD) அவர்களால் புனித பிரான்சிஸ் சவேரியாரின் வாழ்க்கை வரலாறு பற்றியும் இறைவார்த்தையில் ஆன்மீகப்பயிற்சி, தியானித்தல், ஆன்மீக மனநிலை, திருப்பலி ஆன்மீக செயல்பாடு நற்கருணை சந்திப்பு, செபமாலை ஆகிய ஆன்மீக தேடலின் கருப்பொருள்களை தியானிக்க கருத்துரைகளை வழங்கினார்.

மேலும் பீடப்பணியாளர்களால் மரம் நடுகை நிகழ்வும், ஏனைய சிற்றாலயங்களுக்குச் சென்று செபமாலை தியானித்து இறையாசீரும் வேண்டினர். இறுதியாக இறைவனுக்கு நன்றி கூறியும், இந்நிகழ்விற்கு ஒத்துழைப்பு வழங்கிய பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி யோ. டன்ஸ்ரன் அவர்களுக்கும், நிலாவெளி பங்குத்தந்தை அவர்களுக்கும், அருட்சகோதரர் அவர்களுக்கும் பீடப்பணியாளர்கள் சார்பில் எங்களது மனம்நிறைந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

தகவல் :- பீடப்பணியாளர்கள்
புனித மரியாள் பேராலயம், திருகோணமலை

# இறைவேண்டல் ஆண்டு - 2024

'நம்பிக்கையின் (எதிர்நோக்கின்) திருப்பயணிகள்' எனத் தலைப்பிடப்பட்ட மாபெரும் யூபிலி 2025 ஆம் ஆண்டிற்கான ஆயத்தமதில் 2024 ஆம் ஆயத்த ஆண்டினை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைவேண்டல் ஆண்டாக பிரகடனம் செய்துள்ளார். இதனை அறிமுகம் செய்துவைக்கும் நோக்குடன் திருத்தந்தையவர்கள் பொதுக்காலத்தின் மூன்றாம் ஞாயிறாகிய 21.01.2024 அன்று (கடந்த ஐந்து வருடங்களாக இந்ஞாயிறு இறைவார்த்தை ஞாயிறாக திருஅவையில் சிறப்பிக்கப்படுவது வழமை) உரோமையில் திருப்பலியுடன் ஆரம்பித்து வைத்தார். இதற்கு முன்னைய ஆண்டாகிய 2023 ஆம் ஆயத்த ஆண்டினை திருத்தந்தை சங்கத்தின் ஆண்டாக அறிவித்து, இரண்டாம் வத்திக்கான் பேரவையின் நான்கு முக்கிய ஆவணங்களாகிய இறைவார்த்தை (இறைவெளிப்பாடு), திருஅவை, திருவழிபாடு மற்றும் இன்றைய உலகில் திருஅவை ஆகியவற்றை நன்கு கற்கவும், கற்பிக்கவும் திருஅவைக்கு அழைப்பு விடுத்தார்.

திருத்தந்தையவர்கள் யூபிலி 2025 குறித்து 2022 இல் எழுதிய கடிதத்தில் "யூபிலி ஆண்டுக்கு முன்னதான 2024 ஆம் ஆண்டானது 'மாபெரும் இறைவேண்டலின் பல்லிசையாக (சிம்பொனி)' (symphony) அர்ப்பணிக்கப்படும் என்று மகிழ்வுடன் எண்ணுகிறேன். இவ்வாண்டில் ஆண்டவரின் திருப்பாதத்தில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்கவும், அவரை ஆராதிப்பதற்குமான ஆவலை மீளவும் பெற்றுக்கொள்வோம்" எனத்தெரிவித்தார். எனவே யூபிலிக்கான தயாரிப்பில் ஒவ்வொரு மறைமாவட்டமும் தனியான மற்றும் குழும (சமூக) இறைவேண்டலின் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும்.

நம்பிக்கைப் பயணத்தில் இறைவேண்டலின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்துகொள்ளவும், அதன் பெறுமதியினை மீளவும் கண்டுபிடிக்கும் வண்ணமாக யூபிலிக்கு பொறுப்பான உரோமை ஆணைக்குழு பயன்தரும் சில ஆதாரங்களை உதவிக்கு வழங்கியுள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த 06.05.2020 – 16.06.2021 வரையிலான காலப்பகுதியில் வழங்கிய இறைவேண்டல் தொடர்பான முப்பத்தியெட்டு (38) மறைக்கல்வி உரைகளுக்கு மேலதிகமாக இறைவேண்டல் ஆண்டை மையப்படுத்திய 'இறைவேண்டல் குறிப்புகள்' என்கிற எட்டு (08) சிறிய நூற்தொகுதியினை வத்திக்கான் பதிப்பகம் பதிப்பிக்கவுள்ளது. இவ்வெட்டுத் தலைப்புகளில் வெளியிடப்பட்ட நூல்கள் யாவும் மக்களின் வாழ்வில் ஆண்டவருடனான ஆழமான (நெருக்கமான) உறவினை செழுமைமிக்க கத்தோலிக்க பாரம்பரியத்தில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட இறைவேண்டல் வடிவங்களினூடாக காண அழைப்பு விடுக்கின்றது. இதனைவிட, வாழ்வில் நாளாந்த இறைவேண்டலின் முக்கியத்துவத்தினை உணர்ந்திடும் வண்ணம் இணையத்தில் இதற்கான மேய்ப்புப்பணி உதவித்திட்டமானது பங்குத் திருஅவைகளுக்கும், குடும்பங்களுக்கும், அருட்பணியாளர்களுக்கும், முழுநேர தியானத்தில் ஈடுபடுகின்ற அருட்சகோதரிகளுக்கும், இளம் பராயத்தினருக்கும் டிஜிட்டல் வடிவத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இறைவேண்டல் ஆண்டுக்கான எட்டு சிறிய நூற்தொகுதி

1. இன்றைய இறைவேண்டல்: வெற்றிபெற வேண்டிய சவால்
2. திருப்பாடல்களுடன் இறைவேண்டல் புரிதல்
3. இயேசுவின் இறைவேண்டல்
4. புனிதர்கள் மற்றும் பாவிகளுடன் இறைவேண்டல்
5. இறைவேண்டலின் புதுமைகள்
6. இறைவேண்டலில் திருஅவை
7. மரியா மற்றும் புனிதர்களின் இறைவேண்டல்
8. இயேசு நமக்குக் கற்பித்த இறைவேண்டல்: 'விண்ணகத்திலிருக்கிற தந்தையே'

இவற்றுள் முதலாவது நூல் வெளிவந்துள்ளது. ஏனையவை யாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் வெளிவந்துவிடும். இதற்கான ஆங்கில மொழிபெயர்ப்பினை இந்தியத் திருஅவை ஏற்றுக்கொண்டுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறைவேண்டல் குறித்த மறைக்கல்வி உரைகள்

1. இறைவேண்டல் மறைபொருள்
2. ஒரு கிறிஸ்தவனி(ளி)ன் இறைவேண்டல்
3. படைப்பின் மறைபொருள்
4. நேர்மையாளரின் இறைவேண்டல்
5. ஆபிரகாமின் இறைவேண்டல்
6. யாக்கோபுவின் இறைவேண்டல்
7. மோசேயின் இறைவேண்டல்
8. தாவீதின் இறைவேண்டல்
9. எலியாவின் இறைவேண்டல்
10. திருப்பாடல்களின் இறைவேண்டல் (1)
11. திருப்பாடல்களின் இறைவேண்டல் (2)
12. இயேசு, இறைவேண்டலின் மனிதர்
13. இயேசு, இறைவேண்டலின் ஆசிரியர்
14. விடாமுயற்சியுடைய இறைவேண்டல்
15. கன்னி மரியா, இறைவேண்டலின் பெண்மணி
16. வளர்ந்து வருகின்ற திருஅவையின் இறைவேண்டல்
17. ஆசீர்வாதம்
18. விண்ணப்ப இறைவேண்டல்
19. பரிந்துரையின் இறைவேண்டல்
20. நன்றியின் இறைவேண்டல்
21. புகழ்ச்சியின் இறைவேண்டல்
22. திருவிவிலியத்தோடு இறைவேண்டல் செய்தல்
23. வழிபாட்டில் இறைவேண்டல் செய்தல்
24. நாளாந்த வாழ்வில் இறைவேண்டல்
25. இறைவேண்டலும் மூவொரு கடவுளும் (1)
26. இறைவேண்டலும் மூவொரு கடவுளும் (2)
27. மரியாவுடன் குழுமங்களில் இறைவேண்டல் செய்தல்
28. புனிதர்களுடன் குழுமங்களில் இறைவேண்டல் செய்தல்
29. திருஅவை, இறைவேண்டலின் ஆசிரியர்
30. வாய்மொழி இறைவேண்டல்
31. தியான(ம்) இறைவேண்டல்
32. ஆழ்நிலை இறைவேண்டல்
33. இறைவேண்டலின் போராட்டம்
34. பராக்கு (கவன மாற்றம்), வெறுமை வேளைகள், சோம்பேறித்தனம்
35. கேட்பட்டது என்பதன் உறுதிப்பாடு
36. இயேசு, அனைத்து இறைவேண்டலின் ஆன்மாவும், மாதிரியும்
37. அன்பில் விடாமுயற்சியாயிருத்தல்
38. நமக்கான இயேசுவின் பாஸ்கா இறைவேண்டல்

வரும் நாட்களில் இவை குறித்த போதிய விளக்கங்களை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்வோம். உரோமையர் 12:12 இல் கூறப்படுவதுபோல, "எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள், தளரா மனத்துடன் இருங்கள், இறைவேண்டலில் நிலைத்திருங்கள்." இறைவேண்டல் ஆண்டின் பயணமதில் நாம் எதிர்நோக்கி மகிழ்ச்சி கொண்டு, தளரா உள்ளத்துடன் இறைவேண்டலில் இணைந்து பயணிக்க வாழ்த்தி எதிர்நோக்கி நிற்கின்றேன்.

**அருட்பணி அ. அ. நவரத்தினம்**



# கிறிஸ்தவ வாழ்வில் இறைவேண்டல்

**இறைவேண்டல் என்றால் என்ன –:** கடவுளை நோக்கி ஒருவர் தம் எண்ணங்களையும் உள்ளத்தையும் எழுப்புவது இறைவேண்டல் ஆகும். கடவுளது திருவுளத்திற்கேற்ப அவரிடமிருந்து நன்மைகளைப் பெற விண்ணப்பிப்பதும் இறைவேண்டல் ஆகும். இது மனிதரோடு உறவாட விரும்பும் கடவுள் வழங்கும் கொடையாக எப்போதும் உள்ளது. நன்மையே உருவான தந்தையோடும் அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவோடும் உள்ளங்களில் உறையும் தூய ஆவியாரோடும் கடவுளின் பிள்ளைகள் கொள்ளும் தனிப்பட்ட உயிருள்ள உறவே கிறிஸ்தவ இறைவேண்டல் ஆகும்.

**அனைவரும் இறைவேண்டல் செய்ய அழைக்கப்படுவது ஏன் –:** அனைவரும் இறைவேண்டல் செய்ய வேண்டும். ஏனெனில் இறைவன் ஒவ்வொரு உயிரையும் முதன் முதலில் ஒன்றும் இல்லாமையில் இருந்து படைத்தார். தம் வீழ்ச்சிக்குப் பிறகும் கூட, தம்மைப் படைத்தவரை அடையாளம் கண்டுகொள்ளும் ஆற்றலை மனிதர் பெற்றுள்ளனர். தங்களை இவ்வுலகில் வாழ அழைத்தவர் மீது தொடர்ந்து ஆவல் கொண்டுள்ளனர். எல்லாச் சமயங்களும் குறிப்பாக மீட்பின் வரலாறு முழுவதும் இறைவன் மீது மனிதர் கொண்டுள்ள இந்த ஆவலுக்குச் சாட்சி பகர்கின்றன. இருப்பினும் கடவுள் ஒவ்வொருவரையும் தம்மோடு உறவு கொள்ள ஈர்க்கிறார்.

**ஆபிரகாம் மற்றும் மோசே எவ்வாறு இறைவேண்டலின் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்கள் –:** ஆபிரகாம் இறைவேண்டலின் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார், ஏனெனில் அவர் கடவுளுக்குச் செவிசாய்த்து அவர் திருமுன் கீழ்ப்படிந்து நடந்தார். அவரது இறைவேண்டல் நம்பிக்கையுடன் போராடும் செயலாகவும் திகழ்ந்தது; ஏனெனில் சோதனை வேளையில் கூட, அவர் கடவுளின் மாறாத் தன்மையில் தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருந்தார். மேலும், தமது திட்டத்தை அவரிடம் வெளிப்படுத்திய கடவுளை ஆபிரகாம் தம் கூடாரத்திற்குள் வரவேற்றார் ; பாவிகளுக்காக நம்பிக்கையோடு கடவுளிடம் பரிந்துரைக்க துணிவுடன் முன்வந்தார்.

மோசேயின் இறைவேண்டல் ஆழ்நிலை செபத்திற்குச் சிறந்தோர் எடுத்துக்காட்டு, எரிந்துகொண்டிருந்த முட்புதரிலிருந்து மோசேக்கு அழைப்பு விடுத்த கடவுள், அடிக்கடியும் நீண்ட நேரமும் 'ஒருவர் தம் நண்பரிடம் பேசுவது போலவே முகமுகமாய்' (விப 33:11) மோசேயிடம் உரையாடினார். கடவுளோடு கொண்டிருந்த நெருங்கிய ஒன்றிப்பினால் தம் மக்களுக்காக இடைவிடாது பரிந்து பேசும் ஆற்றலை மோசே பெற்றார்.

**இறைவாக்கினர் பணியில் இறைவேண்டலின் பங்கு –:** இறைவாக்கினர் மக்களை இறை நம்பிக்கைக்கும் மனமாற்றத்திற்கும் தூண்டி எழுப்பத் தேவையான தெளிவையும் ஆற்றலையும் தங்கள் இறைவேண்டலில் இருந்து பெற்றுக் கொண்டனர். அவர்கள் இறைவனோடு மிக நெருக்கமாக ஒன்றித்திருந்து ஆண்டவரிடம் தாங்கள் கண்டதையும், கேட்டதையும் யாருக்கு அறிவித்தார்களோ, அந்தச் சகோதர சகோதரிகளுக்காகவும் பரிந்துரைத்தார்கள்.

**இறைவேண்டலில் திருப்பாடலின் முக்கியத்துவம் –:** பழைய ஏற்பாட்டில் திருப்பாடல்கள் இறைவேண்டலின் சிகரமாக உள்ளன. இறைவார்த்தையே மனிதரின் இறைவேண்டல் ஆகிறது. தூய ஆவியாரால் தூண்டப்பட்ட திருப்பாடல்கள் தனிநபர் இறைவேண்டல்களாகவும் குழும இறைவேண்டலாகவும் பிரிக்க எண்ணாதபடி இருக்கின்றன. இந்த இறைவேண்டல் படைப்பிலும் மீட்பு வரலாற்றிலும் வெளிப்பட்ட இறைவனின் வியப்புக்குரிய செயல்களைப் போற்றிப் பாடுகின்றன. கிறிஸ்து திருப்பாடல்களைச் செபித்து நிறைவிற்குக் கொண்டு வந்தார்.

**இறைவேண்டல் செய்ய இயேசு யாரிடம் கற்றுக்கொண்டார் –:** மனிதர் என்ற முறையில் இயேசு தம் தாயிடம் இருந்தும், யூத மரபிலிருந்தும் இறைவேண்டல் செய்யக் கற்றுக்கொண்டார். என்றும் உள்ள இறைமகன் என்ற முறையில் அவருடைய இறைவேண்டல் மறைவான ஊற்றிலிருந்து பெருக்கெடுத்தது. அவர் தம் புனிதமான மனித இயல்பில் பிள்ளைக்குரிய தம்முடைய மேன்மையான இறைவேண்டலைத் தம் தந்தைக்குச் செலுத்துகிறார்.

**இயேசு எப்போது இறைவேண்டல் செய்தார் –:** இயேசு இறைவேண்டல் செய்வதை நற்செய்தி நூல்களில் பல இடங்களில் நாம் காண்கிறோம். இரவில் கூட, அவர் தனிமையில் இறைவேண்டல் செய்தார். தம் பணி வாழ்வின் முக்கிய நிகழ்வுகளுக்கு முன்னும் தம் திருத்தூதர்களின் பணி வாழ்வுக்கு முன்னும் இயேசு இறைவேண்டல் செய்கிறார். அவர் எப்போதுமே தம் தந்தையோடு அன்புறவில் இணைந்திருந்ததால் அவரது வாழ்வு முழுவதுமே ஓர் இறைவேண்டல் எனலாம்.

**நாம் இறைவேண்டல் செய்ய இயேசு எவ்வாறு கற்பிக்கிறார் –:** ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டல் வழியாக மட்டுமன்றி தம்முடைய இறைவேண்டல் வழியாகவும் இயேசு இறைவேண்டல் செய்ய நமக்குக் கற்றுத் தருகிறார். இவ்வாறு நாம் எதற்காக இறைவேண்டல் செய்ய வேண்டும் எனவும் எத்தகைய மனநிலையோடு இறைவேண்டல் செய்ய வேண்டும் எனவும் அவர் நமக்குக் கற்றுத் தருகிறார்.

**நம் இறைவேண்டல் ஏன் பலன் அளிக்க வல்லது –:** இயேசுவின் இறைவேண்டலோடு நமது வேண்டல் நம்பிக்கையில் இணைந்திருப்பதால் அது பலன் அளிக்க வல்லது. இயேசுவின் வழியாகக் கிறிஸ்தவ இறைவேண்டல் தந்தையோடுள்ள அன்புறவாக மாறுகிறது. இவ்வாறு நம் விண்ணப்பங்களைக் கடவுளிடம் எழுப்புகிறோம். அவரும் அவற்றிற்கு செவிசாய்க்கிறார்: "கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள் அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும்"

**கன்னி மரியா எவ்வாறு இறைவேண்டல் செய்தார் –:** கன்னி மரியாவின் இறைவேண்டல், நம்பிக்கையையும் இறைவனுக்குத் தம்மை முழுவதும் தாராளமாகக் கையளிக்கும் பண்பையும் கொண்டிருந்தது. இயேசுவின் அன்னையாகிய அவர் "வாழும் அனைவரின் தாயாகிய" புதிய ஏவாளாகவும் இருக்கிறார். மக்கள் அனைவரின் தேவைகளுக்காகவும் இயேசுவிடம் அவர் இறைவேண்டல் செய்கிறார்.

**தொடக்கக் கிறிஸ்தவ சமூகம் எருசலேமில் எவ்வாறு இறைவேண்டல் செய்தது –:** திருத்தூதர் பணிகள் நூலின் தொடக்கத்தில் எழுதியுள்ளது போல எருசலேமின் தொடக்கக் கிறிஸ்தவச் சமூகம் தூய ஆவியாரால் இறைவேண்டல் செய்யப் பயிற்றுவிக்கப்பட்டது. அதற்கேற்ப இறைமக்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.

**திருஅவையின் இறைவேண்டலில் தூய ஆவியாரின் பங்கு –:** கிறிஸ்தவ இறைவேண்டலின் உள்ளார்ந்த ஆசானாகத் தூய ஆவியார் திகழ்கிறார். செபவாழ்வில் திருஅவையை இவர் உருவாக்குகிறார். கிறிஸ்துவின் ஆழம் காண இயலா மறைபொருளில் மிக உன்னதமான முறையில் ஒன்றிக்க வழி செய்கிறார். திருத்தூதர்கள் எழுதியவற்றிலும் திருமறை நூல்களிலும் காணப்படும் செபங்கள் கிறிஸ்தவ இறைவேண்டலுக்கு அடிப்படை வடிவமாக உள்ளது.

**மரியா இறைவேண்டல் செய்ததாக நற்செய்தி நூல்கள் கூறுகின்றன –:** கலிலேயாவின் கானாவில் மரியா செய்த இறைவேண்டலையும், அவருடைய புகழ்ப் பாடலையும் நற்செய்தி நமக்குத் தருகிறது; இது இறைவனின் அன்னையும் திருஅவையின் அன்னையுமான மரியாவின் பாடல், ஏழையரின் உள்ளத்திலிருந்து எழுகின்ற மகிழ்ச்சி நிறைந்த நன்றிப்பாடல் ஏனெனில் இதில் இறைவனின் வாக்குறுதிகள் குறித்த அவர்களது எதிர்நோக்கு நிறைவு அடைகிறது.

**கிறிஸ்தவ இறைவேண்டலின் அடிப்படைக் கூறுகள் –:** கிறிஸ்தவ இறைவேண்டலின் அடிப்படைக் கூறுகள் வாழ்த்தும், ஆராதனையும், விண்ணப்பமும், பரிந்துரையும், நன்றிகூறலும், போற்றுதலும். வேண்டுதலின் எல்லா வடிவங்களையும் உள்ளடக்கியதாகவும் வெளிப்படுத்துவதாகவும் நற்கருணைக் கொண்டாட்டம் உள்ளது.

**நாம் இறைவேண்டல் செய்ய யார் கற்றுத்தர முடியும் –:** கிறிஸ்தவக் குடும்பம் இறைவேண்டல் செய்யக் கற்றுத்தரும் முதல் பயிற்சிக் கூடமாகும். குறிப்பாக, அன்றாடக் குடும்ப இறைவேண்டல் பரிந்துரைக்கப்படுகிறது. ஏனெனில் திருஅவையில் செப வாழ்விற்கு இதுவே முதல் சாட்சியாகும். மறைக்கல்வி, செபக் குழுக்கள், ஆன்மீக வழிகாட்டல் ஆகியவை இறைவேண்டலுக்கான பயிற்சித் தளங்களும் உதவியும் ஆகும்.

**இறைவேண்டலுக்குத் தடைகள் உள்ளனவா –:** இறைவேண்டல் பற்றிச் சிலர் தவறான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். மேலும் இறைவேண்டலுக்கு நேரமில்லை எனவும் இறைவேண்டல் செய்வது பயனற்றது எனவும் பலர் கருதுகின்றனர். இறைவேண்டல் செய்வோர் துன்பங்களையும், வெளிப்படையான தோல்விகளையும் சந்திக்கும்போது மனத்தளர்ச்சி அடையக் கூடும். இத்தடைகளை மேற்கொள்ளத் தாழ்ச்சி, நம்பிக்கை, விடாமுயற்சி ஆகியவை இன்றியமையாதவை.

**கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி சுருக்கம் என்ற நூலில் இருந்து**

# அரவணைக்க யார் உண்டு?

மடல் – 02

"மறப்பனவற்றுள் சிறியது தேனீ" என்றும் அது கொடுக்கும் தேன் இனியவற்றுள் சிறந்தது" (சீராக் 11:3)

சிறிய தேனீ எவ்வளவு சுவையான தேனைக் கொடுக்கிறது. அது போலத்தான் மாணவராகிய நீயும் மனித சமுதாயத்தில் இப்போது நீ சிறியவன் அல்லது சிறியவள். கடந்த இதழைப் படித்திருப்பாய் என்று நினைக்கின்றேன். படிக்காவிடின் மார்கழி திருமலைத்தீபத்தை தேடி எடுத்துப் படித்துப் பார். உன் கல்வியை சிறப்பாகத் தொடர தூய ஆவியானவரிடம் மன்றாடும்படி எழுதியிருந்தேன் செய்திருப்பாய் என்று நினைக்கின்றேன்.

சில மாணவர்கள் அதைப்பற்றி அக்கறை இன்றி இருந்திருப்பீர்கள். மறந்து விட்டேன் என சிலர் காரணம் கூறலாம். சிலர் நேரம் இல்லை என்று காரணம் கூறலாம். எதிர்காலத்தில் உன்னால் ஆற்ற வேண்டிய பல கடமைகள் உனக்காக காத்துக்கிடக்கின்றன. உன் வரவை முழு உலகமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நீ உணர்வாயா? இதற்காகவே நீ கல்வி கற்கிறாய் அதற்காகத் தான் பெற்றோர்கள் உன் கல்வியில் அதிக அக்கறை செலுத்துகின்றார்கள்.

இப்போது பாடசாலையில் கல்வி நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெப்ரவரி மாத கடைசியில் 2024 ஆம் ஆண்டின் முதலாம் தவணை ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் தவணைப் பரீட்சையில் எத்தனை புள்ளிகளைப் பெற்றிருக்கிறாய் என்று சிந்தித்துப்பார் குறைவான புள்ளிகளைப் பெற்றிருந்தால் என்ன காரணம் என சிந்தித்துப்பார். காரணங்களைக் கண்டு பிடித்தால் அந்தத் தவறை புதிய வகுப்பில் திருத்தி அமைக்க முயற்சி செய்.

என்ன நடந்தது என்பதைக் கண்டு பிடி

- ஒழுங்காக வகுப்புகளுக்கு போனாயா?
- வகுப்பில் ஆசிரியர் கற்பிப்பதை அவதானிக்காமல் வேறு சிந்தனையில் இருந்தாயா?
- அல்லது நண்பர்களுடன் கதைத்துக் கொண்டு இருந்தாயா?
- ஆசிரியர் கற்பிப்பது உனக்கு விளங்கவில்லையா? விளங்கவில்லை என்றால் திருப்பிக் கேட்டாயா?
- திருப்பிக் கேட்டால் மற்ற மாணவர்கள் உன்னைக் கேலி செய்தார்களா?
- வெளியில் கூற முடியாத வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கிறாயா?

தவறுகள் எதுவாயினும் அதை திருத்திக் கொள்.

## மாணவர் தீபம்



"ஆண்டவரை சிக்கெனப் பிடித்துக்கொள். அவரை விட்டு விலகிச் செல்லாதே உன் வாழ்க்கையின் முடிவில் வளமை அடைவாய்" (சீராக் 2:3)

மூன்றாம் தவணைப் பரீட்சை முடிவுற்றதும் புதிய வகுப்பிற்கு போகப் போகிறாய் உனது கல்வி நடவடிக்கை மேலும் அதிகமாகப் போகிறது என்பதை மறவாதே. நன்றாகப் படிக்க முயற்சி செய் படித்து நீ எப்படி எதிர்காலத்தில் வரவேண்டும் என்பதை உனது இலட்சியமாக்கிக் கொள். நீ நினைத்த இலட்சியத்தை நிறைவேற்றும் வரை ஓய்ந்து விடாதே.

பாண்டவர் கதை படித்திருப்பாய், பாண்டவர்களுக்கு வில்வித்தை கற்பித்த துரோணாச்சாரியார் தனது மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார். பாண்டவர் ஐவரும் வில்லில் அம்பை நானேற்றி ஆயத்தமாக நிற்கின்றனர். துரோணாச்சாரியார் பின்வரும் வினாக்களை சகாதேவனிடம் கேட்கின்றார். மரம் தெரிகின்றதா? ஆம் குருவே, கேள்வி தொடர்கின்றது கிளை தெரிகின்றதா? ஆம் குருவே, இலை தெரிகின்றதா? ஆம் குருவே வில்லையும் அம்பையும் கீழே வை என்கிறார்.



தொடர்ந்து நகுலனிடம் அதே கேள்வி நகுலனிடம் இருந்தும் "ஆம்" என்ற அதே பதில் அடுத்து அர்ச்சுனனிடம் கேட்கின்றார். மரம் தெரிகின்றதா? அர்ச்சுனனின் பதில் இல்லை, கிளை தெரிகின்றதா? இல்லை, இலை தெரிகின்றதா? இல்லை, அப்படியென்றால் என்ன தெரிகின்றது? "புறா" ஒன்று தெரிகின்றது. இது அர்ச்சுனனின் பதில், அர்ச்சுனனுக்கு இருந்த ஒரே இலட்சியம் இதில் தெரிகின்றது அல்லவா? வில்லையும் அம்பையும் கையில் எடுத்த பின் எய்யப்படும் பொருள் தவிர வேறு எதுவும் அவனது கண்களுக்கு புலப்படவில்லை. இது இலட்சியத்தின் வெற்றி அது போலத்தான் உன்னையும் கேட்கின்றேன். பரீட்சையில் சித்தி அடைய வேண்டும், கல்வியில் முன்னேற வேண்டும் என்ற இலட்சியம் உனக்கு இருக்கும் போது வேறு எதுவும் உன் கண்களுக்கு புலப்படக் கூடாது. இறைவனைத் தவிர இப்படியான ஒரு இலட்சியத்தில் நீ இருந்தால் வெற்றி உனக்குத் தான். "ஞானத்தை நீ அடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடி அப்போது ஆண்டவரே உனக்கு ஞானத்தை வாரி வழங்குவார்" (சீராக் 1:26)

அடுத்த மடலில் சந்திக்கும் வரை
ஜோ. நோமன் பல்தஸார்
ஓய்வு நிலை அதிபர்

## தவக்காலமும் நாமும்



ஆண்டொன்று போனால் வயதொன்று போகுமென்பது நாமறிந்த உண்மை. ஆண்டொன்று வந்தால் நம்மை ஆய்வு செய்யும் காலமும் அமையும் என்பது உண்மை. கிறிஸ்தவர்களுக்கே உரித்தான பொற்காலமான தவக்காலத்தில் பதித்துவிட்டோம் எம் கால்களை. வருடா வருடம் வருவது தானேயென்று வீணாக விடைகொடுத்து விடாதீர். அன்றைய காலம் போல் இன்றில்லை.

பாவத்தின் எல்லைக்குள் வாழ்கின்றோம் இன்று. திரும்பும் திசையெல்லாம் மலிந்து கிடக்கின்றன பாவம் நாம் விரும்பினாலும் விலகினாலும் நம்மை தொற்றும் அது. நமக்கே தெரியாமல் அதனோடே வாழ்கின்றோம். பாவம் நம்மை நெருங்காதிருக்க தாய் திருஅவை தந்துள்ள கொடையே தவக்காலம். ஒரு வகையில் இது அருளின் காலமென்றும் கூறலாம். அருளைப் பெற்றுத்தர கிடைத்துள்ள இக்காலத்தை பயன்படுத்தினால் பண்படுவோம். இதை உணர்ந்தால் மட்டுமே நமக்குள் மாற்றம் உண்டாகும்.




வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாக நாமிருந்தால் மனம் மாறுவோம் உண்மை உளமாற்றம் பெறுவதனால் தொடருங்கள் தவமுயற்சிகளை. வருடா வருடம் சைவம் என்று அதையே தக்கவைப்பதில் தவறில்லை எப்போது இது முடியும் அசைவத்தை தொட என்றெண்ணுவது பாவம் தானே. குடியும், புகையும் உடலின் பகைவனென்று வேரோடு பிடிங்கினால் சிறப்பு. நாற்பது நாள் மட்டுமே அவன் நமக்குப் பகைவனென்று அல்லேலூயா சனி முடிய, ஓர் ஆட்டம் போட்டால் அது பாவம் தானே. பக்தி முயற்சிகள் பக்தியை வளர்ப்பதாய் இருப்பது சிறப்பு. கடமைக்காய் தேர்ந்தெடுப்பது கவலை.



தவக்காலம் அருளின் காலமென்றேன் பொற்காலமென்றேன், கூடவே, மனமாற்றத்தின் காலமும் இதுதான். அமைதியாய் யோசித்தால் நமக்குள் உள்ள பாவங்கள் ஒவ்வொன்றாய் வெளிவரும். இத்தனை பாவங்களா? எமக்குள் என்று ஆச்சரியம் வேண்டாம். இதனுடனா? இத்தனை காலம் வாழ்ந்தேனென்று அசிங்கப்படுவோம். வெளித்தோற்றத்தில் நாம் புனிதர்களாக சக மனிதர்களுக்கு தெரிந்திருக்கும். உள் மனதின் அழுக்கு எமக்கும், கடவுளுக்கும் மட்டுமே புரியும். இரு கரம் நீட்டி அழைக்கும் இறைவனை நெருங்கிச் செல்ல எமக்குள் தடையாய் இருப்பது பாவமே, நினைத்தால் நிச்சயம் மாறலாம்.

எவ்வளவு காலம் இம் மண்ணில் வாழப்போகிறோம், நேற்று இருந்தோர் இன்றில்லை. இன்றிருப்போர் நாளை இருந்தால் ஆனந்தம் நாளை என்பது நமக்கும் தானே. வாழ்க்கை வாழ்வதற்கே என்று தவறான பாதைக்குள் நுழையாமல் சரியானதை தேர்வு செய்வோம். மிகச் சரியானதை செய்வோம். மலர்ந்துள்ள தவக்காலம் உங்கள் எங்கள் மட்டில் மகிழ்ச்சியை அளிக்கட்டும் இறைவனுக்கு நன்றி



இயேசுவின் நாமத்தில்
திருமதி. ஜோ. அனஸ்ரி அமலராணி
மறையாசிரியர்

செபத்தின் மூலமாக ஆண்டவரோடு பேசு. அவருடைய வார்த்தையின் மூலமாக அவர் உன்னோடு பேசுவார்."

## செபம் என்றால் என்ன தெரியுமா?

இறைவன் எங்கும் இருக்கிறார். அனைத்திலும் இருக்கிறார் எப்போதும் இருக்கிறார். அவரின் உயிருள்ள உடனிருப்பை உணர்வதற்கு அடிப்படையாக இருப்பது செபம். புனிதர்கள், ஆன்மீக மனிதர்கள், வாழ்க்கை அனுபவங்களிலிருந்து இதனை நன்கு நாம் அறிந்து கொள்கின்றோம்.

உதாரணமாக: "இறைவனை நான் நம்புவதற்கு காரணம் தினம்தோறும் நான் செபிக்கும் செபமே" என்கிறார் கார்ல் ரானர். செபத்தில் மிகமுக்கியமானது நிறைய சிந்திப்பது அல்ல மாறாக "அன்பு செய்வதே" என்கிறார் தூய அவிலா தெரசா. செபத்தால் தீர்க்கப்பட முடியாத பிரச்சனைகள் வேறு எதனாலும் தீர்க்கப்பட முடியாது. "ஆழமான நம்பிக்கை நான் இறைவனைத் தேடி செல்வதற்கான அடிப்படைக் காரணம்" என்கிறார் ஆபிரகாம் லிங்கன். சுருங்கக் கூறின் இறைவனால் மட்டுமே நிரப்பப்படக்கூடிய பகுதி ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வோம். அதே வேளை திருஅவை பாரம்பரியம் சில செபங்களை நமக்கு கொடுத்திருக்கிறது. அவற்றை நாம் வெறுமனே உச்சரித்தால் இறை அனுபவம் பெறமுடியாது. நாம் செபிக்கும் போது பல்வேளைகளில் நம்வாய் மட்டும் பேசுகிறது. நம் எண்ணங்களும் சிந்தனைகளும் எங்கெங்கோ அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. நான் அன்றாடம் அடிக்கடி பயன்படுத்தும் தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே ஆமென். என்ற சிலுவை அடையாளச் செபத்தின் அர்த்தம் என்ன? அது நம் வாழ்விற்கு கொடுக்கும் செய்தி என்ன? என்றாவது சிந்தித்திருக்கின்றோமா. செபமாலையின் போது நாம் பயன்படுத்தும் மக்களவார்த்தை செபத்தின் பொருள் உணர்ந்து செபிக்கின்றோமா? செபிக்க கற்றுத்தாரும் என்ற போது இயேசு சீடர்களிற்கு கற்றுக்கொடுத்த இறைவேண்டலின் உள்ளார்ந்த அர்த்தத்தை உணர்ந்துகொள்வோமா? சிந்திப்போம் செயல்படுவோம்.

கீத்தா கீர்த்தி
கிறிஸ்தவ வாழ்வு சமூகம்.

## செப வாழ்வு

கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் அடித்தளமும் செபமாகும். செபமானது இறைமனித உறவை வளப்படுத்தி பலப்படுத்தி நிற்கின்றது. எம்மை இறைவனுடன் ஒப்புரவாக்க உதவுவது செபமாகும். நாம் தனியாகவும், குழுவாகவும், குடும்பமாவும் இணைந்து இறைவனுடன் உறவை மேம்படுத்த இவ்செப ஆண்டானது எம்மை அழைத்து நிற்கின்றது.

எமது வாழ்வை புனிதப்படுத்தி பலப்படுத்த செபத்தினை நாம் ஆயுதமாகக் கொள்ள வேண்டும். அன்றாட வாழ்வில் ஏற்படும் சவால்கள், பிரச்சனைகள், சோதனைகளை வெற்றி கொள்ள செபத்தினை போர்க்கருவியாக பயன்படுத்தி நவீன உலகின் சவால்கள் தடைகளையும் சாத்தானின் சோதனைகளிலிருந்தும் வெற்றி கொள்ள செபத்தை எம் வாழ்வில் கடைப்பிடிப்போமாக. செபிக்கத் தெரியாதவனுக்கு வாழத் தெரியாது என புனித கிறிஸ்தோஸ்தம் அருளப்பர் கூறுகின்றார்.

எம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது வாழ்வினை எமக்கு ஓர் உதாரணமாக எடுத்துக்காட்டியுள்ளார். இயேசுவின் வாழ்வு முழுவதும் இறைதந்தையுடன் நெருங்கி தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதே தமது வாழ்வின் குறிக்கோள் என்பதை வாழ்ந்தும் காட்டினார். அவர் ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு முன்னும் செபத்தில் ஈடுபட்டு தனது வாழ்வினை எமக்கு முன்னுதாரணமாகக் காட்டியுள்ளார்.

இயேசு திருமுழுக்கு பெற்று, இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்த போது வானம் திறந்து தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர் மீது இறங்கியது (லூக்கா 4:21- 22) இவ்வாறு இறைதந்தையுடன் இறைவேண்டலில் ஈடுபட்ட விதம் தொடர்பாக நாம் அறிகின்றோம். அதேபோன்று அற்புதங்களினைச் செய்யும் முன்னும் இறைவேண்டலில் ஈடுபட்டார்.

இயேசு இறைபணி செய்ய திருத்தூதர் பன்னிருவரை தெரிவு செய்யும் முன்னும் இறைவேண்டலில் ஈடுபட்டார். ஐயாயிரம் பேரின் பசியை இறைவேண்டலில் ஈடுபட்டு நிறைவேற்றினார். இயேசு தமக்காகவும், சீடர்களுக்காகவும், உலக மக்களுக்காகவும் இறைவனுடன் இறைவேண்டலில் ஈடுபட்டார்.

சீடர்களில் ஒருவர் இயேசுவிடம் யோவானின் சீடர்கள் இறைவனிடம் வேண்டகற்றுக் கொடுத்தது போல் எங்களுக்கும் கற்றுக்கொடும் என்றார். எனவே இயேசு சீடர்களுக்கு இறைதந்தையுடன் உரையாடும் விதத்தை கற்றுக்கொடுத்தார். இறுதியாக தமது வாழ்வின் நிறைவில் எமது பாவங்களை மீட்டு தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற சிலுவையிலே தம் உயிரை ஒப்படைத்து "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்" என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார். இவ்வாறு இயேசுவின் வாழ்வே செபவாழ்வாக அமைந்தமை நாம் திருவிவிலியம் மூலமாக அறிகின்றோம்.

எனவே கிறிஸ்தவனின் வாழ்வு செப வாழ்வாக அமைய வேண்டும். ஒவ்வொரு நாளும் தனியாகவும், குழுவாகவும், குடும்பமாகவும் செபவழிபாடு, திருச்செபமாலை, நற்கருணை சந்திப்பு, அருளடையாளங்களை பெறல் போன்ற செயற்பாடுகளினை கடைப்பிடித்து இறைதந்தையின் அன்பை சுவைத்து எமது வாழ்வை எடுத்துக்காட்டான வாழ்வாக மாற்றுவோம். நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் இறைவனுடன் இணைய அழைத்துச் செல்வோமாக எனவே திருஅவை இவ் ஆண்டில் எம்மை இறைஅன்பில் நிலைத்து புனித வாழ்வு வாழ அழைக்கின்றது.

திருமதி. டயானா ரூபன்
மறையாசிரியர்

## திருமலைத் தீபத்தின் இம்மாதப் பக்கம்
## அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை பங்கு மக்களுக்கு

**செப ஆண்டின் சிறப்பாக திருவிவிலியத்தில் எமது முதாதையரின் செபங்கள் சில.**

**ஆபிரகாமின் செபம் (தொ.நூல் 12:8)**
ஆபிராம் அங்கிருந்து புறப்பட்டு பெத்தேலுக்குக் கிழக்கே இருந்த மலைப்பக்கம் சென்று பெத்தேலுக்கு மேற்கே ஆயிக்குக் கிழக்கே கூடாரம் அமைத்துக் குடியிருந்தார். அங்கே ஆண்டவருக்கு அவர் ஒரு பலிபீடத்தை எழுப்பி ஆண்டவரது திருப்பெயரைத் தொழுதார்.

**ஈசாக்கின் செபம் (தொ.நூல் 26:25)**
எனவே ஈசாக்கு அங்கு ஒரு பலிப்பீடம் எழுப்பி ஆண்டவரின் திருப்பெயரைப் போற்றினார்.

**யாக்கோபின் செபம் (தொ.நூ 47:31)**
அப்பொழுது இஸ்ரேயல் படுக்கையில் தலைப்பக்கம் திரும்பித் தொழுதார்.

**மோசேயின் செபம் (வி.ப 9:30)**
மோசே பார்வோனை விட்டு அகன்றார் ஆண்டவரை நோக்கி மன்றாடினார். மோசேயின் மன்றாட்டிற்கு இணங்க ஆண்டவர் செயலாற்றினார்.

**சிம்சோனின் செபம் (நீதி 16:28)**
சிம்சோன் ஆண்டவரை நோக்கி என் தலைவராகிய ஆண்டவரே இந்த முறை மட்டும் என்னை நினைவு கூரும்… என்று மன்றாடினார்.

**அன்னாவின் செபம் (1 சாமு 1:10)**
அன்னா மனம் கசந்து அழுது புலம்பி ஆண்டவரிடம் மன்றாடினார்.

**சாமுவேலின் செபம் (1 சாமு 7:9, 15:11)**
ஆகவே பால் குடிக்கும் ஓர் ஆட்டுக் குட்டியை சாமுவேல் பிடித்து அதை ஆண்டவருக்கு முழு எரிபலியாக செலுத்தி இஸ்ரயேலுக்காக அவரிடம் மன்றாடினார். ஆண்டவரும் அவர் தம் மன்றாட்டைக் கேட்டார். சாமுவேல் மனம் வருந்தி இரவெல்லாம் ஆண்டவரிடம் மன்றாடினார்.

**சவுலின் செபம் (1 சாமு 15:31)**
சாமுவேல் திரும்பி சவுலின் பின்னே செல்ல சவுலும் ஆண்டவரைப் பணிந்து தொழுதார்.

**தாவீதின் செபம் (2 சாமு 12:16)**
தாவீது அக்குழந்தைக்காக ஆண்டவரிடம் மன்றாடினார். உண்ணா நோன்பு மேற்கொண்டு உள்ளே சென்று இரவெல்லாம் தரையில் படுத்துக் கிடந்தார்.

**சாலமோனின் செபம் (1 அரசர் 8: 22–54)**
இவ்வாறு சாலமோன் வானத்தை நோக்கி கைகளை உயர்த்தி முழந்தாளிட்டு ஆண்டவரிடம் இந்த வேண்டுதல் விண்ணப்பத்தை எல்லாம் சொல்லி மன்றாடினார்.

**எலியாவின் செபம் (எசா 31: 2–3)**
ஆபிரகாம், ஈசாக்கு இஸ்ரயேல் என்பவர்களின் கடவுளான ஆண்டவரே….. எனக்கு பதில் தாரும் என் மன்றாடினார்.

**எசேக்கியாவின் செபம் (எசா 38: 2–3)**
எசேக்கியா சுவர்ப்பக்கமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு ஆண்டவரிடம் மன்றாடி…. என்று கூறிக் கண்ணீர் சிந்தி தேம்பித் தேம்பி அழுதார்.

**யோபுவின் செபம் (யோபு 1:20)**
யோபு எழுந்தார் தம் உடைகளைக் கிழித்துக் கொண்டார். தம் தலையை மழித்துக் கொண்டார் பின் தரையில் வீழ்ந்து வணங்கி என் தாயின்…. ஆண்டவர் அளித்தார். ஆண்டவர் எடுத்துக் கொண்டார் ஆண்டவரது பெயர் போற்றப் பெறுக என்றார்.

**தானியேலின் செபம் (தானி 8:3)**
நான் நோன்பிருந்து சாக்கு உடை அணிந்து சாம்பலில் அமர்ந்து தலைவராகிய என் கடவுளிடம் திரும்பி மன்றாடி வேண்டிக் கொண்டேன். என் கடவுளாகிய ஆண்டவர் முன் என் பாவங்களை அறிக்கையிட்டு நான் மன்றாடியது…..

**யூதித்தின் செபம் (யூதித்து 9:1)**
யூதித்து குப்புற விழுந்து தலையில் சாம்பலைத் தூவிக் கொண்டார். எருசலேமில் கடவுளின் இல்லத்தில் அன்றைய மாலை வழிபாடு நடந்து கொண்டிருந்த நேரத்தில் ஆண்டவரை நோக்கி உரத்த குரலில் பின்வருமாறு மன்றாடினார்…..

**எஸ்தரின் செபம் (எஸ் 4:17)**
சாவுக்குரிய துன்பத்தில் துடித்த எஸ்தர் அரசி ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்தார்….. இஸ்ரயேலின் கடவுளறிய ஆண்டவரை பின்வருமாறு மன்றாடினார்.

**யோனாவின் செபம் (யோனா 2:1)**
யோனா அந்த மீன் வயிற்றில் இருந்தவாறு தம் கடவுளாகிய ஆண்டவரிடம் மன்றாடினார். ஆண்டவரே….

**இயேசுவின் செபம் (மாற்கு 2:35)**
இயேசு விடியற்காலை கருக்கலில் எழுந்து தனிமையில் ஓர் இடத்திற்கு புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்.

மேரி செலின் தனராஜா
மறையாசிரியர்

அனுஷியா ஒரு துடிப்பான சிறுமி கல்வியில் மிகவும் கெட்டிக்காரி. தாய் மேரி தந்தை ஆபிரகாமிற்கு ஒரே பிள்ளை என்பதால் அனுஷியா செல்லமாகவே வளர்க்கப்பட்டாள். தந்தை ஆபிரகாம் தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதால் அவளுடைய வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியுடனும், குதூகலத்துடனும் சென்றது. செல்வச் செழிப்புடன் வளர்ந்த அனுஷியாவின் தேவைகள் அனைத்தையும் அவளது பெற்றோர் எந்தக் குறையும் இல்லாமல் நிறைவேற்றி வந்தனர். ஆறு வயதான அனுஷியாவை ஊரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் சேர்த்தனர். தரம் ஒன்றில் கல்வி கற்கும் அவளின் சுட்டித்தனத்திற்கு அளவே இல்லை என்று கூறலாம்.

காலங்கள் உருண்டோடின அனுஷியா தற்போது தரம் ஐந்தில் கல்வி கற்கிறாள். தரம் ஐந்து என்றாலே புலமைப்பரிசில் பரீட்சை தான் அனைவரது உள்ளங்களிலும் நிழலாடும். அனுஷியாவும் பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களை கவனமாக கற்பாள் அதே நேரம் இறைநம்பிக்கையில் விசுவாசம் கொண்டவளாகவும் இருந்தாள். பரீட்சை நாளும் வந்தது வினாத்தாளில் உள்ள வினாக்களுக்கு சிறப்பான முறையில் விடையளித்தாள். மாதங்கள் மறைந்தன பெறுபேறுகளும் வெளியாகின. அனுஷியா 194 புள்ளிகளைப் பெற்று மாகாண ரீதியில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டாள்.



காலங்கள் மறைந்தன மகிழ்ச்சியாயிருந்த குடும்பத்தில் ஆபிரகாமிற்கு தலையிடி வாந்தி அடிக்கடி ஏற்பட்டு அவதிப்பட்டு நோய்வாய்ப்பட்டிருந்தார். இதனால் உடல் பலவீனமடைய இறுதியாக கொழும்பில் உள்ள ஒரு பிரபல வைத்தியசாலையில் விஷேட வைத்திய நிபுணரிடம் காட்டிய போது ஆபிரகாமிற்கு தலையில் புற்றுநோய் இருப்பது தெரிய வந்தது அதிர்ச்சியில் உறைந்தனர் தாயும் மகளும். ஆபிரகாமின் மருத்துவச் செலவு, நாளாந்த வீட்டுச் செலவு மற்றும் அனுஷியாவின் கல்விக்கான செலவு என சமாளிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்த குடும்பத்திற்கு இப்படி ஒரு நிலையா? என தாயும் மகளும் கண்கலங்கினாலும் இறைவன் மீது உள்ள நம்பிக்கையால் அவர்கள் இருவரும் ஆபிரகாமிற்காக தினமும் இறைவனிடம் வேண்டுதல் செய்தனர்.

# தன் நம்பிக்கையின் ஒளி



தனது கணவர் படுத்த படுக்கையாக கிடக்கும் போது அனுஷியாவை தனியே வீட்டில் விட்டு தாய் வெளி இடங்களுக்குச் சென்று வேலை செய்யமுடியவில்லை. இதனால் அவள் வீட்டில் கடையப்பம் செய்து கடைகளுக்கு போட ஆரம்பித்தாள். அனுஷியாவும் வீட்டு நிலைமைகளை அறிந்து தாய்க்கு முடியுமான சிறு சிறு வேலைகளைச் செய்து கொடுத்தாள் இதன் மூலம் கிடைக்கும் சிறிய வருமானத்திலிருந்து அனைத்து செலவுகளையும் சிக்கனத்துடன் கவனித்து வந்தாள் மேரி.

தனது செல்ல மகள் அனுஷியா வைத்தியராக வேண்டும் என்ற இலட்சியத்தை சிதைத்து அவளின் படிப்பை இடைநிறுத்த விரும்பவில்லை. அனுஷியாவின் பெற்றோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தமது மகளை படிக்க வைக்க வேண்டுமென தந்தையான ஆபிரகாம் தனது மனைவிக்கு கூறினார்.

காலம் செல்லச் செல்ல ஆபிரகாமின் உடல் மிகவும் மோசமாகியது மூன்று வருடங்களாய் புற்று நோயுடன் போராடிப் போராடி வருகின்ற அவரது உடல் மெலிவடைந்து தோற்றமே மாறியிருந்தது. மனைவி மேரியையும், மகள் அனுஷியாவையும் பற்றிய சிந்தனை அவரது மனதில் எழும்போதெல்லாம் அவரது உள்ளமோ உடைந்து போனது சோக உருவங்களுடன் நாட்கள் சென்றன.

திடிரென ஒரு நாள் ஆபிரகாமிற்கு மூச்சு வேகமாய் உள்வாங்கத் தொடங்கியது. புற்று நோயுடன் மாரடைப்பும் வர மரண தேவன் அவரை ஆட்கொள்ள இவ் உலக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். கணவன் தன்னை விட்டு பிரிந்ததை எண்ணி மேரி கண்கலங்க பதினான்கு வயதிலேயே தந்தையை இழக்க நேரிட்டதே என்றெண்ணி கவலையில் மூழ்கினாள் அனுஷியா. நாளாந்தம் தங்களுடைய கடமைகளை இறைவனுக்கு ஏற்ற விதத்தில் செய்து வந்தார்கள் என்றாலும் மேரி தனது மகள் அனுஷியாவை தேற்றுவதும், அவர்கள் இருவரது வாழ்வும் தனிமையை உணர்ந்த வண்ணம் சென்றது. என்றாலும் இறைவன் தமக்கு உதவிக்கரம் நீட்டுவார் என்ற நம்பிக்கையுடன் தாய் மேரி தான் செய்து வந்த தொழிலில் ஈடுபடலானாள். தாயின் கஷ்டத்தை பார்க்கும் போது அனுஷியாவின் கண்கள் கலங்கின.

அவள் பல தடவைகள் தனது தாயிடம் அம்மா அப்பாவும் இறந்து விட்டார். இப்ப நீங்க கஷ்டப்பட்டு வீட்டுச் செலவுகளோடு என்னுடைய படிப்புச் செலவுகளையும் கவனிப்பது கஷ்டமாக உள்ளது அதனால் நான் பள்ளிக்கூடம் போகாம இருந்தா நானும் உங்களோடு சேர்ந்து வேலையில் ஈடுபடலாமே. எனக்கு வைத்தியராக வர ஆசைதான்... ஆனா இந்த நேரத்தில் எனக் கவலையை சுமந்தவளாய் கூறினார் அனுஷியா. அதற்கு தாய் மேரியோ மகளே அப்பாவும் உன்னை நல்லா படிக்கவெச்சி வைத்தியராக்கனும் என்றுதான் ஆசைப்பட்டாரு ஆனா அதுக்கு முன்னர் அவர் இறந்து விட்டார் நீ என்னைப்பற்றி கவலைப்படாத உன்னைப் படிக்க வைத்து



# படித்ததில் பிடித்தது

ஓர் ஆதிவாசிகள் கிராமம்
மெத்தப் படித்த நகரத்து மாணவர்களின் பத்து நாள் பயிற்சி முகாம்
சிறார்களுக்கான விளையாட்டு விழா நேரம் அது.
முதலில் 200 மீட்டர் ஓட்டப் பந்தயம்.

## சம பரிசு

ஐந்து சிறார்கள் தயாராய் நிறுத்தி வைக்கப்பட்டனர்
ஓட்ட நெறி முறை விளக்கப்பட்டது:
'தம்பிகளா..!
இங்கே நல்லா கவனியுங்க.
'ரெடி, ஸ்டெடி, கோ..' ன்னு நான் கத்தியவுடனே
அதோ அந்த எல்லை மரத்தை ஓடித் தொட வேண்டும்.
யார் முதலில் தொடுவீர்களோ அவருக்கே முதல் பரிசு'
தலையாட்டி நின்றனர்:
'ரெடி... ஸ்டெடி... கோ...'



சிட்டாய்ப் பறந்தனர் சிறார்கள்.
முதலாவதாய் ஓடியவன் பாதித் தூரத்தில் நின்றான்.
திரும்பிப் பார்த்தான்.
கைகளை ஆட்டிக் கத்தினான்:
'எல்லோரும் சீக்கிரம் ஓடி வாங்க.. ஓடி வாங்க...'

ஒவ்வொருவராய் ஒன்று சேர்ந்தனர்
கைகளைக் கோர்த்துக் கொண்டனர்.

மீதித் தூரத்தை ஒரேயடியாய் எல்லோரும் ஒரே நேரத்தில் ஓடி...
எல்லையைத் தொட்டனர்.
ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டனர்.

ஒன்று சேர்ந்து குரல் கொடுத்தனர்:
'எல்லோருக்குமே முதல் பரிசுகள் கொடுங்கள்'

அவர்களில் ஒருவன் கேள்வி ஒன்றை எழுப்பினான்:
'ஒருவர் வெற்றி பெற்று...
ஒன்பது பேர் தோற்று நிற்பது தான்
விளையாட்டா?
அதுக்கு ஒரு விழாவா..?

**சமமான பரிசை அறிவிப்பதே சமத்துவ ஓட்டம்**

**முனைவர் சேவியர் அந்தோனி சே.ச**



ஒரு நல்ல வைத்தியராக்கி மக்களுக்கு சேவை செய்ய வைக்கனும் என்பது தான் இப்ப என்னுடைய ஆசை. அதனால் நீ தொடர்ந்து படி என ஆறுதல் படுத்தி கல்வியில் முன்னேற்றமடையச் செய்தாள் தாய் மேரி.

வருடங்கள் எவ்வாறு ஓடி மறைந்ததோ தெரியவில்லை க.பொ.த சாதாரணதரப் பரீட்சையையும் எழுதி அதில் ஒன்பது பாடங்களில் "A" சித்தி பெற்று உயர்தரப் பிரிவிலும் தன் திறமையை வெளிக்காட்டி தன் பெற்றோரின் ஆசைக்கேற்ப வைத்தியப் பீடத்திற்குத் தெரிவானால் அனுஷியா.

தன் வைத்திய படிப்பை முடித்து ஒரு சிறந்த வைத்தியராகப் பட்டம் பெற்றாள். தாய் மேரியின் சந்தோசத்திற்கு அளவேயில்லை அவளது கஷ்டங்கள் எல்லாம் தூசாய் பறந்தன. அனுஷியா வைத்தியராக அரச வைத்தியசாலையில் தனது தந்தையின் நினைவாக புற்று நோய்ப்பிரிவில் விஷேட வைத்தியராகக் பெறுப்பேற்றாள். தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு சிறப்பாக சேவையாற்றி வந்தாள் தாய் மேரியும் மகள் அனுஷியாவும் தந்தை ஆபிரகாமின் நினைவுகள் நிழலாட இறை ஆசீர்வாதத்துடன் தன் நம்பிக்கையின் ஒளியாய் வாழ்ந்தனர்.

**அலோசியஸ் நோயல் டானியல்**
**உவர்மலை**

# மாணவர் தேடல்...

## கிறிஸ்து செய்த புதுமைகள் பற்றிய கண்ணோட்டம்

தொடர்ச்சி...

### புதுமைகளின் வகைகள்

சாத்தானின் வல்லமையை தோற்கடித்து விண்ணரசு வந்து விட்டது என்பதை வெளிப்படுத்தவே இயேசு புதுமைகள் பல செய்தார். மனிதன் நான்கு வகையான அடிமைத்தனங்களுக்கு உள்ளானான். அவை மரணம், நோய், இயற்கை அனர்த்தம், தீய ஆவிக்கு அடிமையாதல் என்பனவாகும். இவ் அடிமைத்தனங்களுக்கு உள்ளாகி துன்பப்படும் மனிதனின் மனநிலையை மீட்டு பாவத்தின் பிடியிலிருந்து இறையரசின் விழுமியங்களுக்குள் நுழைய புதுமைகளை செய்தார். மேற்கூறிய விடயங்களை கொண்டு கிறிஸ்து செய்த புதுமைகளை நான்கு வகையாக பிரிக்கலாம்.

- நோயாளர்களைக் குணமாக்கல்
- இறந்தோரை உயிர்ப்பித்தல்
- அசுத்த ஆவியை விரட்டுதல்
- இயற்கையோடு தொடர்பான புதுமைகள்

1. நோயாளர்களைக் குணமாக்கல்

நோய் என்பது பழைய ஏற்பாட்டிலும் சரி புதிய ஏற்பாட்டிலும் சரி பாவத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது என்றும் அது ஒரு சாபமாகவே கருதப்பட்டது. மனித சக்திக்கு அப்பாற்பட்டு நோயாளரை நெருங்குவது சட்டத்தை மீறுவதாகும் இவ்வாறான இன்னல்கள் நிறைந்த ஒரு காலகட்டத்திலே இயேசு கிறிஸ்து மக்கள் மத்தியில் சென்று பல வல்ல செயல்களை செய்தார். மனிதரால் சாதிக்க முடியாதவற்றை சாதிக்க இயேசுவுக்கு கடவுள் தமது வல்லமையை அருளினார். இயேசு அநேக அரும் அடையாளங்களை விண்ணரசின் திட்டத்தை வெளிப்படுத்தவே ஆற்றினார்.
உதாரணமான: தொழுநோயாளரின் நோய் நீங்குதல், முடக்குவாதமுற்றவரை குணமாக்கல்

2. இறந்தோரை உயிர்ப்பித்தல்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்" (யோவான் 11:25) என்ற இறைவார்த்தையினை எமது விவிலியப் பகுதியில் காண்கின்றோம். இன்று பல கல்லறைகளில் இவை பொறிக்கப்பட்டு இருக்கின்றன அதாவது கடவுளை நம்பும் எமக்கு இறந்தாலும் வாழ்வுண்டு என்பதை தெளிவுபடுத்துகின்றது.
உதாரணமாக: இலாசரை உயிர்ப்பித்தல்

3. அசுத்த ஆவியை விரட்டுதல்

தீய சக்தி என்பது யூதர்களின் காலத்தில் மிகவும் கொடிய சபிக்கப்பட்ட நிகழ்வாகக் காணப்பட்டது. பாவத்தின் உச்சநிலை எந்த சக்தியிலும் அவர்களை மீட்க முடியாது என்று இருந்தனர்.
உதாரணமாக: தொழுகைக் கூடத்தில் பேய்பிடித்தவரை நலமாக்கல்

4. இயற்கையோடு தொடர்புடைய புதுமை

இறைவன் படைத்த எழில்மிக்க இவ்வுலகில் அதிசயங்களும் அற்புதங்களும் நிறைந்தது கடவுள் மனிதனுக்காக இயற்கையைப் படைத்தார். "தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த போது ஆண்டவரின்ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது." கடவுள் வார்த்தையானவர் வார்த்தையால் இவ்வுலகை படைத்தார் என்பதை (தொ 1:1-31) வரையான பகுதியில் காணலாம். இதற்கு முன் பார்த்த புதுமைகள் இயேசு மக்களை மையப்படுத்தி செய்தவையாகும். ஆனால் இப்புதுமைகளானது இயற்கை மீது இயேசுவுக்குள்ள அதிகாரத்தை மையப்படுத்தும் வகையில் உள்ளது.
உதாரணமாக: தண்ணீரை இரசமாக மாற்றுதல், காற்றையும் கடலையும் அடக்குதல்.

நிரோசா

---

### குழந்தை இயேசு ஆலய திருவிழா தொடர்ச்சி...

கொடியும் ஏனைய எட்டு வலயங்களுக்கான புதிய பெயர்கள் அதாவது குழந்தைப் பருவப் புனிதர்களின் பெயர்கள் சூட்டப்பட்ட புதிய கொடிகள் எமது பங்கின் முதல் ஆலயம் அமைந்திருந்த ஆயரின் இல்லத்தில் இருந்து எமது மறைமானில ஆயர் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு இசைவாத்தியங்களுடன் அங்கிருந்து பவனியாக எடுத்துவரப்பட்டு கொடியேற்றப்பட்டது.

தொடர்ந்து ஒவ்வொரு நாட்களும் இவ்வருடம் இறைவேண்டலின் ஆண்டு என்பதற்கு ஏற்ப கொடுக்கப்பட்ட தலைப்புக்களில் குருக்களால் சிறப்பு மறையுரைகள் வழங்கப்பட்டது. தினமும் காலை 6.30 – 8.30 மணிவரை நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு மௌன ஆராதனை இடம் பெற்றதோடு 02.02.2024 வெள்ளிக்கிழமை நோயாளர்களுக்கான சிறப்பு வழிபாடு 8.00 முதல் 11.30 மணிவரை எண்ணெய் பூசி ஆசீர்வதிக்கப்பட்டது. இன்நிகழ்வில் பங்குமக்கள், ஏனைய பங்குமக்கள், வேறு மறைமாவட்டங்களில் இருந்து இறைமக்கள் பங்கேற்றதுடன் பிறமத சகோதரரர்களும் எம்முடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அவர்களது நம்பிக்கை எம்மை பிரமிக்கவைத்ததும் உண்மையே

இவ்வருடம் புதிய செயற்பாடுகளாக அமைந்த விடயம் எமது சுற்றுப்பிரகாரம் வழமையான பாதைகளில் அமையாது அனைத்து இறைமக்களையும், உவர்மலையை முழுமையாக பிரதிபலிக்கும் நோக்குடனும், உவர்மலை முன் பகுதியை முழுமையாக உள்வாங்கும் நோக்குடனும் ஊர்வலம் அமைந்தது. ஊர்வலத்தில் பயன்படுத்தப்பட்ட பாடல்கள் அனைத்தும் எமது பங்குப் பாடகர் குழுவினால் பாடப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டதுடன், எமது பங்குத்தந்தை அருட்பணி X.I. ரஜீவா இருதயராஜ் அவர்களால் எழுதி இசையமைத்து அவர் பாடிய பாடல் ஒன்றும் திருவாளர். அருள்ராஜ் அவர்களால் எழுதி இசையமைத்து எமது பங்குப் பிள்ளைகளால் பாடலும் புதிதாக வெளியிடப்பட்டது. இதில் அருட்தந்தையின் பாடல் உவர்மலை குழந்தை இயேசுவை நாடுவோர் பெறும் ஆசீரை தெளிவாக எடுத்துரைப்பதும் கேட்பதற்கும் ஆன்மீகத்தை வளர்ப்பதற்கும் சிறப்பாக அமைந்துள்ளது.

இத்தனை ஆசீர்களுடன் எம் திருநாள் திருப்பலி மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய மேதகு கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஆயர் தமது மறையுரையின் செய்தியில் அற்புதக் குழந்தை இயேசுவின் அற்புதங்களுக்குச் சாட்சியாக விளங்கும் பங்குப் பேரவைக்கு வாழ்த்துக்கூறி ஆசீர் அளித்தார். எமது பங்குத் திருவிழாவில் பங்கேற்ற அனைத்து உள்ளங்களுக்கும் எம் மனம் கனிந்த நன்றிகளும் அற்புதக் குழந்தை இயேசுவின் ஆசீரும் உரித்தாகுக.

உவர்மலை பங்கு மக்கள்


---

உவர்மலை குழந்தை இயேசு ஆலய

### திருப்பாலத்துவ சபை தினம்

11.02.2024 எமது பங்குத்தந்தையும் எமது சிறார்களும் திருப்பாலத்துவ சபை தினத்தை வெகுசிறப்பாக கொண்டாடினார்கள். அன்றையநாளில் இறைவேண்டலின் இவ்வாண்டில் குழந்தைகள் உங்கள் செபம் கடவுள் கனிவாக கேட்பார் என்பதனையும், சிறுவர்கள் சிறுவர்களுக்கு நற்செய்தியாளர்களாக மாறுதல், சிறுவர் சிறுவர்களுக்கு உதவி செய்தல், சிறுவர் சிறுவர்களுக்காக செபித்தல் போன்ற மூன்று விடயங்களும் திருப்பாலத்துவ சபை பிள்ளைகளுக்கும், பங்கு மக்களுக்கும், திருப்பலியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எடுத்துரைக்கப்பட்டது.





கிறிஸ்துவின் பிறப்பு விழாவை சிறப்பிக்கும் முகமாக 2023.12.30 அன்று கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட ஒளிவிழா நிகழ்வுகளும், 2024 ஆம் ஆண்டின் கருப்பொருளை ஒட்டிய செப ஆண்டில் அனைத்துக் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகத்தினரையும் செபிக்க அழைக்கும் முகமாக அனைவருக்கும் ஒளிவிழா நிகழ்வின் இறுதியில் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. எமில் சுசந்த அவர்களினால் செபமாலை வழங்கப்பட்டது.

---

## ஏன் இத்தவக்காலம்

ஒரு முறை திருமுழுக்கு யோவானின் சீடர்கள் இயேசுவிடம் சென்று நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை? என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி " மணமகன் தங்களோடு இருக்கும் வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரிய வேண்டிய காலம் வரும் அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்" என்றார்.

இயேசுக் கிறிஸ்துவின் இந்த கூற்றின் அடிப்படையிலேயே நோன்புக் காலமாகிய தவக்காலத்தை தொடக்ககால கிறிஸ்தவர்கள் உருவாக்கினர். கி.பி 2ஆம் நூற்றாண்டில் இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவுக்குத் தயாரிப்பாக இரண்டு நாட்கள் நோன்பிருக்கும் வழக்கம் கிறிஸ்தவர்கள் மத்தியில் தோன்றியது. புனித வெள்ளி, புனித சனி ஆகிய நாட்களில் உணவும், தண்ணீரும் இன்றி 40 மணி நேரம் அவர்கள் தொடர்ந்து நோன்பு கடைப்பிடித்தனர். 3ஆம் நூற்றாண்டில் புனித வாரம் முழுவதும் ஒருவேளை உணவுடன் நோன்பிருக்கும் நடைமுறை உருவானது 4 ஆம் நூற்றாண்டில் உயிர்ப்பு பெருவிழாவுக்கு முன்பு 40 நாட்களை தவக்காலமாக கடைப்பிடிக்க வேண்டுமென திருஅவை அறிவித்தது. நோவா காலத்துப் பெருவெள்ளம் நாற்பது பகலும், நாற்பது இரவும் நீடித்தது. சீனாய் மலையில் பத்துக் கட்டளை பெறும் முன் மோசே நாற்பது பகல், நாற்பது இரவு உண்ணாமல் கடவுளுடன் இருந்தார். ஒரேப் மலையில் கடவுளுடன் நாற்பது பகல், நாற்பது இரவுகள் எலியா நடந்துள்ளார். இந்த நாற்பது என்ற எண் விவிலியத்தில் ஆன்மீகப் பொருள் மிகுந்த எண்ணாகக் கருதப்படுகிறது. இயேசு கிறிஸ்துகூட தன் பொதுவாழ்வில் தனது பணியைத் தொடங்கும் முன் பாலைவனத்தில் நாற்பது பகலும், நாற்பது இரவும் நோன்பிருந்து பிரார்த்தனை செய்தார். இப்படியான விவிலிய வார்த்தைகள் மற்றும் திருஅவை மரபுப் பின்னணிகள் நமது நாற்பது நாட்கள் தவக்கால நோன்பைப் பொருள் உள்ளதாக்குகின்றன.

இணையம்

## புனிதர்களின் பாதையில்....

# புனித லாரன்ஸ்



இயேசுக் கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு வாழ்ந்ததோடு, திருஅவையின் சொத்துக்களை பராமரித்தவர். கிறிஸ்துவுக்காகப் பணிசெய்து மறைசாட்சியாக மாறிட ஆவல் கொண்டவர். இறைவார்த்தையை வாழ்வாக்கி பறைசாற்றியவர். கிறிஸ்துவுக்காக துன்பங்களை துணிவுடன் ஏற்றுக்கொண்டு மறைசாட்சியாக மாறியவரே புனித லாரன்ஸ். இவர் உரோமைத் திருத்தொண்டர்களுள் ஒருவராக பணியாற்றியவர். இரண்டாம் திருத்தந்தை சிக்ஸ்துஸ் இவரது நண்பர் இவரது மறையுரையால் பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இரண்டாம் திருத்தந்தை சிக்ஸ்துஸ் கொலைக் களத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டபோது, "தூய குருவே உமது திருத்தொண்டர் இல்லாது நீர் மட்டும் செல்வதேன்" என்று லாரன்ஸ் கேட்டார். அதற்கு, "நீர் மூன்று நாட்களில் என்னை பின்செல்வாய்" என்று திருத்தந்தை பதில் கூறினார்.

லாரன்ஸ் கிறிஸ்துவை அறிவித்த காரணத்தால் மக்ரியன் அரசன் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தான். திருஅவையின் சொத்துக்களைத் தன்னிடம் ஒப்படைக்கக் கட்டளையிட்டான் லாரன்ஸ் மறுநாள் காலையில் நடக்க இயலாதவர், பார்வையற்றவர், முதியோர், ஆதரவற்றோர் போன்ற ஏழை எளிய மக்களை அரசன் முன்பாக நிறுத்தி, இவர்களே திருஅவையின் சொத்து என்றார். இதைக்கேட்ட அரசன் கோபங்கொண்டு அவரை இரும்புக் கட்டிலில் படுக்கவைத்து அடியில் தீ மூட்ட கட்டளையிட்டான். நெருப்பின் தணல் வெந்து வேதனையால் துடித்தார். லாரன்ஸ் அரசனைப் பார்த்து "கொடுங்கோலா! என் உடல் இந்தப்பாகம் நன்றாக வெந்துவிட்டது. திருப்பிப்போடு நன்றாக வெந்ததும் எடுத்து சாப்பிடு" என்றார். அவரது முகம் விண்ணக ஒளியால் சுடர்விட்டது பார்த்தவர்கள் பரவசமடைந்து கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டார்கள். லாரன்ஸ் ஆகஸ்ட் 10ஆம் நாள் மறைசாட்சியாக இறந்தார்.



---

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா



இன்னுமா தயக்கம் 31

# சோதனைகளா சாதனைகளா!!!

இறையேசுவில் பிரியமான ! இறைவனின் அன்புப் பிள்ளைகளாக நாம் வாழ நம்மில் உள்ள நல்லவற்றை பெருக்கவும், தீமைகளைக் களையவும் இந்தத் தவக்காலம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இந்த காலத்தில் நம்மை முழுமையாக ஆய்வு செய்து நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியமான அழைப்பாக இருக்கின்றது. இந்த அழைப்பை நம் வாழ்வில் எப்படி செயல்படுத்துவது என்பதையே இந்தக் கட்டுரையில் நாம் காணப் போகின்றோம்.

ஒரு மறைக்கல்வி வகுப்பில் ஆசிரியர் ஒரு கேள்வி கேட்டார்: ஒரு அரசு அலுவலகத்தில் இரு ஊழியர்கள் சமமான அதிகாரத்துடன் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். ஒருவர் பணக்காரர், இன்னொருவர் ஏழை, பணக்காரரைச் சுற்றி எப்போதும் மக்கள் பல தேவைகளை லஞ்சம் கொடுத்து நிறைவேற்றிக் கொள்ள நின்று கொண்டிருப்பார்கள். ஆனால் ஏழையைச் சுற்றி பலர் நிற்பதில்லை. காரணம் அவர் மிகவும் நேர்மையானவர், தனது செயல்பாடுகளில் எந்தக் கைம்மாறும் எதிர்பார்க்காமல் மிகவும் உண்மையாக உழைப்பவர்.

லஞ்சம் வாங்குபவர் அழகான காரில் அலுவலகம் வருகின்றார். மிகவும் வசதியாக வாழ்கின்றார். ஆனால் நேர்மையாக இருப்பவர் சாதாரண மிதிவண்டியில் தான் அலுவலகம் வருகின்றார், நிம்மதியாக வாழ்கின்றார். இந்த இரண்டு பேரில் நீங்கள் யாரை உங்கள் நண்பராக தேர்ந்தெடுப்பீர்கள்?

இந்தக் கேள்விக்கு பலர் பல பதில்களைக் கொடுத்தனர். பெரும்பாலானவர்கள் அந்த நேர்மையாளரையே எங்கள் நண்பராகத் தேர்ந்தெடுப்போம் என்று கூறினர். ஆனால் இந்தக் கேள்விக்கு ஒரு சிறுவன் சற்று வித்தியாசமான பதிலைச் சொன்னான். அவனது பதில் ஒரு நிகழ்ச்சியை விவரித்தது: இரண்டு நாட்களுக்கு முன் அந்த சிறுவனும் அவனது வயதான பாட்டியும் ஆலயத்திற்குச் சென்றார்கள். திருப்பலி முடிந்தபின் ஒவ்வொரு புனிதர்களின் சுரூபத்திற்கும் சென்று பாட்டி வணக்கம் செலுத்திக் கொண்டிருந்தாள். இறுதியாக புனித மிக்கேல் அதிதூதரின் சுரூபத்திற்கு வந்தாள். கொஞ்ச நேரம் சுரூபத்திற்கு முன் ஜெபித்து விட்டு ஒரு சிறிய மாலையை மிக்கேல் அதிதூதருக்கு அணிவித்தாள். அதன் பின் இன்னொரு சிறிய மாலையை எடுத்து மிக்கேல் அதிதூதரின் காலடியில் கிடந்த பாம்பாகிய சாத்தானுக்கும் அணிவித்தாள். சிறுவனுக்கு சந்தேகம், ஏன் பாட்டி சாத்தானுக்கும் மாலை அணிவிக்கின்றாள்? தன் சந்தேகத்தை ஆலயத்தை விட்டு வெளியே வந்ததும் கேட்டான். பாட்டி சொன்னாள், "நாம் நல்லது செய்யும் வரை மிக்கேல் அதிதூதர் நமக்குத் துணையிருப்பார். ஆனால் நாம் எப்போதும் நல்லவர்களாகவே இருப்பதில்லை. சில தருணங்களில் தீமை செய்கின்றோம். அந்த நேரங்களில் நமக்கு இந்த சாத்தான் தான் உதவியாக வரவேண்டும். எனவே சாத்தானுடைய உதவியும் நமக்குத் தேவை!" என்று பதிலளித்தாளாம்.

இந்தக் கதையை தனது பதிலாக அந்த சிறுவன் சொன்னான். அது எனக்குள் பல கேள்விகளை உருவாக்கியது. நாம் நல்லவர்களாக இருக்கும் வரை தான் நல்லவர்களை நாடுகின்றோம். நாம் எப்போதும் நல்லவர்களாகவே இருப்பதில்லை. நேர்மையாக செயல்பட்டால், நாம் நேர்மையான அதிகாரியிடம் செல்லலாம். ஆனால் பல வேளைகளில் நாம் குறுக்கு வழியில் தான் செல்ல விழைகின்றோம். அப்போது நமக்கும் குறுக்கு வழியில் பயணிக்கும் மனிதர்கள் தான் தேவை.

ஒருவேளை நான் நல்லவனாக இருந்திருந்தால் என்னைச் சுற்றி பல நல்லவர்களையே உருவாக்கியிருப்பேன். ஆனால் நான் குறுக்கு வழியில் பயணம் செய்பவனாக இருப்பதால் தான் பல குறுக்கு வழியில் பயணிக்கும் மக்களை என் சுயநலனுக்காக உருவாக்குகின்றேன்.

ஆண்டவர் இயேசு பாலை நிலத்தில் 40 நாட்கள் தவமிருந்தபின் முக்கியமான மூன்று சோதனைகளை சந்திக்கின்றார். முதல் சோதனை பணத்திற்கான சோதனையாகும். இந்த கற்களை அப்பமாக்கி உண்ணு என்பது அவரது பணிக்காலத்தில் அவர் தனது தந்தையின் தொழிலைச் செய்ய முடியாது. முழு நேர இறையாட்சிப் பணியை அவர் தன் கரத்தில் ஏற்றிருக்கின்றார். எனவே தான் உண்பதற்கு, தங்குவதற்கு என்ன செய்வது என்ற கவலை அவருக்கு வருகின்றது. அப்போது, பணத்திற்காக என்ன செய்வது என்ற கவலை வரும் போது அவர் சொல்வார், "மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று இறைவனின் வாயினின்று வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் உயிர் வாழ்கின்றான்!" என்று. அதாவது நம்மைப் பற்றி நாம் கவலை கொள்வதை விட இறைவன் அதிகமாக கவலை கொள்கின்றார். எனவே நாம் நமது இந்த உலகத் தேவைகளைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம் என்பதே அதன் செய்தியாகும்.

இரண்டாவதாக ஆண்டவரை ஆலயத்தின் உச்சியிலிருந்து கீழே குதிக்கச் சொல்கிறது அலகை. இது தனது புகழுக்கான சோதனையாகும். நினிவே நகருக்குள் யோனா இறைவாக்கினர் சென்று இறைவனின் வார்த்தையை அறிவிக்கின்றார். அந்த மக்கள் யோனாவை ஒரு இறைவாக்கினராகக் கண்டு கொண்டார்கள். அதனால் அவரது குரலுக்கு செவிமெடுத்து இறைவனை நோக்கி திரும்புகின்றனர்.

இங்கே இயேசு ஒரு இறைவாக்கினராக மக்கள் மத்தியில் மதிக்கப்படவில்லை. எனவே தான் இந்த ஆலயத்தின் உச்சியிலிருந்து கீழே குதித்து வானதூதர்களால் தாங்கப்பட்டால், தன்னை மக்கள் ஒரு மெசியா என்று உணர்ந்து கொள்வார்கள். அதன் பின் மறைப்பணியாற்றுவது பெரிய சவாலாக இருக்காது என்று அவர் நினைக்கின்றார். அந்த புகழ் என்னும் சோதனையை அவர் வெல்கின்றார்.
அதைத் தொடர்ந்து சாத்தான் தன்னை தெண்டனிட்டு வணங்கினால் இந்த உலகத்தை முழுவதும் இயேசுவின் காலடியில் கொடுப்பதாக வாக்களிக்கின்றது. அதாவது இந்த உலகின் அதிகாரத்தை தீமையின் உதவி கொண்டு இயேசு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவருக்கு சோதனை அளிக்கின்றது. ஆனால், கடவுளோ தனது அதிகாரம், அந்த அதிகாரத்தை நேர்மையாளர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ள இயலும். தீமையோடு கை கோர்த்துக் கொண்டால், அது மாயையே தவிர உண்மையல்ல என்பதை உணர்த்துவதற்காக இயேசு, "அப்பாலே போ சாத்தானே!" என்று கூறி தன்னை சோதனைகளிலிருந்து விடுவித்துக் கொள்கின்றார்.

"பணம், புகழ், அதிகாரம்" இவற்றின் கைகளில் தான் இந்த உலகம் சிக்குண்டு தவிக்கின்றது. இவற்றை தன் வாழ்வில் வென்று நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டை கொடுக்கின்றார். இயேசுவைப் போன்று நாமும் திடமான மனதுடன் உறுதியாக நின்று சோதனைகளை வெல்லவேண்டும் என்பதே இந்தத் தவக்காலத்தின் நோக்கமாகும். இந்தத் தவக்காலத்தில் நம்மை அதிகம் தாக்கும் இத்தகைய சோதனைகளை வென்று வாழவும், சோதனைகளுக்கு எதிராக நன்மைகளால் நம் வாழ்வை நல்வழிப்படுத்திக் கொள்ளவும் இந்த நாட்களில் முயற்சி செய்வோம்.

## புனித யோவான் நற்செய்தி 13 – 16 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 700/= 2ஆம் பரிசு 500/= 3ஆம் பரிசு 300/=

**கேள்வி பதில்**

1. ஆண்டவரே நீரா என் காலடிகளைக் கழுவப் போகிறீர்? என்று பேதுரு கேட்டதற்கு இயேசுவின் பதில் என்ன?

விடை:.....................................................................................................

2. இயேசுவின் கட்டளை என்ன?

விடை:.....................................................................................................

3. இயேசு உண்மையான திராட்சை செடி குறித்து கூறியது என்ன?

விடை:.....................................................................................................

4. இயேசு தம் சீடர்களின் கால்களைக் கழுவியதன் நோக்கம் யாது?

விடை:.....................................................................................................

5. இயேசு யூதாசுக்கு அப்பத்துண்டை கொடுத்த பின் கூறியது என்ன?

விடை:.....................................................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. இயேசு பேதுருவைப் பாரத்து நீ மும்முறை என்னை மறுதலிக்கும் முன் சேவல் கூவாது என்றார். ( )

7. குளித்து விட்டவர் தம் காலடிகளை மட்டும் அல்ல கைகளையும் சேர்த்துக் கழுவுதல் வேண்டும். ( )

8. யூதாஸ் அப்பத்துண்டைப் பெற்றதும் சாத்தான் அவனுக்குள் நுழைந்தான் ( )

9. வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. ( )

10. இயேசு நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன் இப்போது உலகை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன் என்றார். ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. உண்மையை ________________ தூய ஆவியார் வரும் போது ________________ நோக்கி உங்களை ________________

12. நீங்கள் ஒருவர் ________________ செலுத்தும் ________________ நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் ________________

13. இயேசு அவரிடம் ________________ தம் ________________ மட்டும் கழுவினால் போதும்.

14. நான் உங்களோடு ________________ இருப்பது போல நீங்களும் என்னோடு ________________

15. ஆண்டவரே என் ________________ மட்டுமல்ல என் ________________ ________________ கூடக் கழுவும் என்றார்.

பெயர் :.....................................................................

முகவரி :.....................................................................

பங்கு :.....................................................................

முடிவுத்திகதி 25.05.2024

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 58 எசாயா 15 – 19 அதிகாரங்கள்

1. ஒரே இரவில் இன் நகரம் அழிக்கப்படுவதால் இதுவும் அழிக்கப்படும்.

விடை:.....................................................................................................

2. தீபோன் நீர் நிலைகள் இதனால் நிரம்பி வழிகின்றன.

விடை:.....................................................................................................

3. இவன் ஒழிந்து போவான் இது ஓய்ந்து போகும் இவர்கள் நாட்டில் இல்லாது போவர்.

விடை:.....................................................................................................

4. ஆதலால் இவன் அழுது புலம்பட்டும் இவருக்காக யாவரும் கதறியழட்டும்.

விடை:.....................................................................................................

5. சிறகடித்து அலையும் இதனைப் போலும் கூடு இழந்த இதனைப் போலும் மோவாபிய மகளிர் அர்னோன் துறைகளில் காணப்படுவர்.

விடை:.....................................................................................................

6. இன் நாட்டின் அரண் தரைமட்டமாகும் இதன் அரசு இல்லாதொழியும்.

விடை:.....................................................................................................

7. இவரின் நிலைமை இருக்கும்.

விடை:.....................................................................................................

8. தாங்கள் கைபடச்செய்த இவைகளை நோக்கமாட்டார்கள்.

விடை:.....................................................................................................

9. ஆறுகள் குறுக்காகப் பாய்ந்தோடும் அந்த நாட்டிலிருந்து படைகளின் ஆண்டவரது பெயர் தங்கியுள்ள இந்த மலைக்கு அக்காணிக்கைகள் கொண்டு வரப்படும்.

விடை:.....................................................................................................

10. இவர்களுக்கு எதிராக இவர்களையே நான் கிளர்ந்தெழச் செய்வேன்.

விடை:.....................................................................................................

11. இந்த நகர் தலைவர்கள் அறிவிலிகள் ஆனார்கள் இந்த நகரின் தலைவர்கள் ஏமாந்து போனார்கள்.

விடை:.....................................................................................................

12. எகிப்திலிருந்து இங்கு செல்ல ஒரு நெடுஞ்சாலை உருவாக்கும்.

விடை:.....................................................................................................

13. என் மக்களினமாகிய ம், என் கைவேலைப்பாடாகிய ம், என் உரிமைச் சொத்தாகிய ம் ஆசிபெறுக.

விடை:.....................................................................................................

14. ஓங்கிய அவர் கைமுன் அவர்கள் இவர்களைப் போல் அஞ்சி நடுங்குவர்.

விடை:.....................................................................................................

15. இங்கு சென்று மன்றாடியும் அவர்களுக்கு ஒன்றும் இயலாமற்போயிற்று.

விடை:.....................................................................................................

பெயர் :.....................................................................

முகவரி :.....................................................................

தரம் :.....................................................................

பங்கு :.....................................................................

முடிவுத்திகதி 25.05.2024

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



படம் 01



படம் 02

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 ற்கு மாத்திரம் நிறம்தீட்டி படம் 02 இல் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - 700/- 2 ஆம் பரிசு - 500/- 3 ஆம் பரிசு - 300/-

பெயர் :........................................

முகவரி :........................................

தரம் :........................................

பங்கு :........................................

*முடிவுத்திகதி 25.05.2024*

### விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 45
### நீதிமொழிகள் (13 - 15) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நா | ■ | | | | | | | | நீ |
| | அ | | | | | | | | ■ |
| | | வா | | | | | | | |
| | | கோ | நே | | | | ■ | | |
| | | | | | | து | | | |
| | | | ■ | | | வ | | | |
| | | | கூ | | | | | | |
| | | | | | | ந | | | |
| த | | | | | | | ஊ | நி | |
| ■ | ■ | | | | | | | | உ |

1. நா – க் – ப் – வ ர்
2. நீ – பா – கா – கு –
3. அ – ம – ழ் ச் –
4. கோ – க – ம்
5. நே – வ –
6. உ – ம – க் – ம்
7. கூ – ம –
8. உ – ப் – ளி – ப –
9. வா – கு ப் – ற – த
10. து – க் –
11. த – த் தோ – – ம்
12. நி – செ – வ –
13. வ – மை
14. ஊ – றா – ம்
15. ந – பே –
16. அ – – கொ – கி – ர்

பெயர் :........................................

முகவரி :........................................

பங்கு :........................................

*முடிவுத்திகதி 25.05.2024*

### சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு 500/= ரூபா
பிராங்க் செபஸ்தியன்
இல. 64, மத்திய வீதி,
உவர்மலை
குழந்தை இயேசு ஆலயம்

2 ஆம் பரிசு 300/= ரூபா
ஜோ. அருஷன்
இல. 101, அன்புவழிபுரம்
புனித சதா சகாய அன்னை ஆலயம்

3 ஆம் பரிசு 200/= ரூபா
தெபோரா
நாவற்சோலை, கும்புறுபிட்டி
புனித சவேரியார் ஆலயம்

### ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 56 எசாயா 05 – 09 அதிகாரங்கள்

1 ஆம் பரிசு 500/= ரூபா
ஜெ. ஜெயதர்ஷன்
சந்தை வீதி, மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம்

2 ஆம் பரிசு 300/= ரூபா
டே. மெருஷியன் பிள்ளை
இல. 68, உவர்மலை
குழந்தை இயேசு ஆலயம்

### புனித யோவான் நற்செய்தி அதிகாரங்கள் 05 – 08

1 ஆம் பரிசு 500/= ரூபா
அ. ஜெயறுக்சன்
இல. 260/97, அலஸ்தோட்டம்
இறை இரக்கத் திருத்தலம்

2 ஆம் பரிசு 300/= ரூபா
விஜயகுமார் கிர்த்திக் நோயல்
இல.85, புளியங்குளம்
இறை இரக்கத் திருத்தலம்

3 ஆம் பரிசு 200/= ரூபா
ஷிம்திகா
சந்தை வீதி, மூதூர்
புனித அந்தோனியார் ஆலயம்

3 ஆம் பரிசு 200/= ரூபா
அ. கிறிஸ்து ராணி
சந்தை வீதி, மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம்

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

மறையாசிரியர்களுக்கான வருடத்தின் முதல் கருத்தமர்வானது 20.01.2024 அன்று மறைக்கல்வி நிலையத்தில் எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை மற்றும் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி. அ.அ. றொகான் பேணார்ட் அடிகளாரின் தலைமையிலும் நடைபெற்றது. இதில் தமிழ், சிங்கள மறையாசிரியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களுக்கான க.பொ.த சாதாரண தர கருத்தமர்வானது 27.01.2024 அன்று மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. தமிழ் மாணவர்களின் கருத்தமர்வினை திருமதி. சுரேந்தினி மணிவண்ணன் அவர்களும், சிங்கள மாணவர்களின் கருத்தமர்வினை திருமதி. நிமேஷிகா தனாஜ்சனி அவர்களும் நடாத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



இவ்வருடம் மறையாசிரியர் தேர்வு 1,2,3 பரீட்சை எழுதவிருக்கும் தமிழ் மற்றும் சிங்கள ஆசிரியர்களுக்கான கருத்தமர்வானது மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. தமிழ் மொழி கருத்தமர்வினை அருட்பணி. எமர்சன் றாகல் அடிகளாரும், சிங்கள மொழி கருத்தமர்வினை அருட்பணி. றிசில சசிந்த பெர்ணாண்டோ அடிகளாரும் நடாத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



**அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தில் 2024.01.15 அன்று பொங்கல் திருப்பலியானது இளைஞர் ஒன்றியத்தினால் சிறப்பிக்கப்பட்டது. 2024.02.02 அன்று மரியாயின் சேனையின் 31வது ஆண்டு நிறைவு திருப்பலியானது மரியாயின் சேனை அங்கத்தவர்களால் சிறப்பிக்கப்பட்டது. 2024.02.04 அன்று சுதந்திரதின நிகழ்வு மற்றும் திருப்பாலத்துவ மறைபரப்பு ஞாயிறு திருப்பலியும் சிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

